விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 302 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 30 செவ்வாய்க்கிழமை (17.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மாதமே

## ● எங்கும் மரண ஓலம் ● எங்கும் பிணக்குவியல்

# இஸ்ரேல் - காசா யுத்தம்

# உலகப் போராக மாறும் பயங்கரம்

## தாக்குதலுக்கு தயாராகும் நாடுகள்



**(காசா) இஸ்ரேல் - காசாவில் வெடித்திருக்கும் யுத்தம் உலகப் போராக மாறும் பயங்கரம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச போரியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.**

இஸ்ரேல் மீது கடந்த 7 ஆம் திகதி ஹமாஸ் தீவிரவாதிகள் அதிரடித் தாக்குதல் நடத்தியமை 1500க்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர்.

இதனை அடுத்து ஹமாஸ் தீவிரவாதிகளை முற்றாக அழிக்கும் திட்டத்துடன் ஹமாஸ் தீவிரவாதிகளின் கோட்டையாக இருக்கக் கூடிய காசா மீது இஸ்ரேல் படைகள் மிகப் பயங்கரமான தாக்கு 16

## வல்வெட்டித்துறையில் ஆணொருவர் சடலமாக மீட்பு

(கரணவாய்)

வல்வெட்டித்துறை ஆதி கோவிலடி பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த இராமநாதன் தங்கநாதன்(வயது-63) 15

## வயோதிபரின் சடலம் மீட்பு

(கரணவாய்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வெளிப்புறத்தில் உள்ள மணிமண்டபம் ஒன்றிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 15

## விபரீத முடிவெடுத்து இரு மாணவிகள் மரணம்

### கிளிநொச்சியில் துயரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பெரியபரந்தன் பகுதியில் விபரீத முடிவெடுத்து இரு பாடசாலை மாணவிகள் உயிரிழந்துள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நண்பிகளான சுரேஸ்குமார் தனிகை (வயது-17), லோகேஸ்வரன் தமி 15

## தேர்தலை பிற்போட்டால் சட்டநடவடிக்கை எடுப்போம்

### எதிர்க்கட்சிகள் கூட்டாகச் சூளுரை

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு புதிய தேர்தல் முறை கொண்டுவரப்படும் என்று கூறி ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத் தேர்தலையும் அரசாங்கம் ஒத்திவைக்க முயற்சித்தால், அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க அனைத்து எதிர்க்கட்சிகளும் தீர்மானித்துள்ளன. 15

## இஸ்ரேல் - காசா யுத்தம் இலங்கை அணிசாரக்கூடாது

### ஐக்கிய மக்கள் சக்தி கருத்து



(கொழும்பு)

இஸ்ரேல் - காசா மோதலில் இலங்கை அரசாங்கம் நடுநிலைமை வகிக்க வேண்டும் என பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இஸ்ரேல் - காசா 15

## தேர்தலை பிற்போட ஒருபோதும் இடமளியோம்

### பெரமுன உறுதி

(கொழும்பு)

தேர்தலைப் பிற்போடும் நிலைப்பாட்டில் பொதுஜன பெரமுன இல்லை என அக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம்தொடர்பாக அவர் மேலும் 15

## க.பொ.த சாதாரண தர பரீட்சை முடிவுகள் நவம்பரில்

### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் நவம்பர் மாதம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

தற்சமயம் பரீட்சை பெறுபேறுகளை கணினிமயமாக்கும் பணிகள் இடம்பெற்று வருவதாக 15

## கணவனின் கண்மூடித்தனமான தாக்குதல்; இளம் மனைவி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் வந்த கணவன் கண்மூடித்தனமாக தாக்கியதில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இளம் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் நாவற்குழி பகுதியை சேர்ந்த அஜந்தன் - யமுனா என்ற இரு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நாவற்குழி ஐயனார் கோவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு மதுபோதையில் வந்த கணவன் மனைவி மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியதில் குறித்த பெண் படுகாயமடைந்துள்ளார்.

இதையடுத்து அயலவர்களினால் குறித்த பெண் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய 16



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

31ஆம் நாள்

# நினைவலைகள்



தாயின் மடியில் 24 . 08 . 1971

இறைவன் அடியில் 18 . 09 . 2023

# அமரர் நடராசா நித்தியராஜ்

**(பருத்தித்துறை தும்பளை முத்துராஜா புரடக்சன் நாடக மேடை அமைப்பாளர், முன்னாள் பிரியங்கா டிஜிற்றல் கலர் லாப் பணிப்பாளர்)**

நித்தியென நாம் அழைக்க
நித்திலத்தில் நீங்களில்லை
நித்தம் உமை தேடி – உம்
நினைவினில் திழைக்கின்றோமையா!

பெற்றோர்க்கு நற் பிள்ளையாய்
சகோதரர்க்கு என்றுமே அரணாய்
உறவினர்க்கு உற்ற உதவியாளனாய்
ஆலோசனை பல கூறி வழி நடத்தினீரையா
இன்று நாம் வழிகாட்டியை தவறவிட்டு
வழிநடுவில் தவிக்கின்றோமையா!

பல்லாண்டுகள் எம்முடன்
பயணிப்பீரென நாம் இருக்க
பாதை நடுவில் எமை பரிதவிக்கவிட்டு
கண்ணிமைக்கும் நொடிப் பொழுதில்
எங்கு சென்றீர்? எமைவிட்டு

முகத்தில் புன்னகையெனும் பொன்னகை தாங்கி
துணிந்து காரியங்கள் ஆற்றிடும் பண்பும்
கம்பீரமான உமது குரலும்
இன்றும் எம் காதில் ஒலிக்கின்றதையா!
என்றுமே நாம் நல்வழியால் வாழ
வானுறையும் தெய்வமாக இருந்தெமை வழிகாட்டிடுங்கள்.

இன்று (17.10.2023) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கேணியில் இடம் பெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் 11 மணியளவில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

**தம்புருவளை பிள்ளையார் கோவில் ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.**

**இவ்வண்ணம்
குடும்பத்தினர்**

(17486)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பதின்ம வயதினரில் 40 சதவீதமானோர் மனநோயால் பாதிப்பு

## ஆய்வுத் தகவல்

**(கொழும்பு) நாட்டில் பதின்ம வயதினரில் 40 சதவீதமானோர் மனநல நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.**

குழந்தை பருவ வளர்ச்சியை மேம்படுத்தும் திட்டம் தொடர்பாக இடம்பெற்ற கூட்டத்தின் போதே தாய் - சேய் குடும்ப சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ நிபுணர் சித்ரமாலி டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள் ளார்.

பதின்ம வயதினரிடையே ஏற்படும் தனிமை, மனக் குழப்பங்கள், மனஅழுத்தங்கள், எரிச்சல்கள் மற்றும் கோபங்கள் போன்ற செயற்பாடுகளினால் ஏற்படும் மனநல பாதிப்பின் உச்சக்கட்டமே தற்கொலை போன்ற நிலைமைக்கு முக்கிய காரணம் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, நாட்டில் தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கையில் அதிகமானோர் பதின்ம வயதினர் என ஆய்வறிக்கையில் வெளியான தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளதாக மருத்துவ நிபுணர் சித்ர மாலி டி சில்வா மேலும் தெரிவித்தார். (5-6)

# தயாசிறிக்கு பதவி வழங்குவது தொடர்பில் சுதந்திரக்கட்சி ஆலோசனை

(கொழும்பு)
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் நாயகம் பதவியில் இருந்து நீக்கப்பட்ட தயா சிறி ஜயசேகரவுக்கு சிரேஷ்ட உப தலைவர் பதவி வழங்குவ தற்கு கட்சியின் சிரேஷ்டர்கள் குழுவொன்று யோசனை முன் வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்கள் 6 பேர் உள்ள நிலையில், தயாசிறி ஜயசேகர அப்பதவியைப் பொறுப்பேற்றால் சிரேஷ்ட உபதலைவர்களின் எண்ணிக்கை 7 ஆக உயரும்.

தயாசிறி ஜயசேகர மீண்டும் கட்சியில் இணைந்தால் அவருக்கு கட்சியின் தலைவர், செயலாளர் அல்லது தேசிய அமைப்பாளர் பதவிகளை தவிர வேறு பதவிகள் வழங்கப்படலாம் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (5-6)

# இலங்கை மத்திய வங்கியின் அறிவிப்பு

(கொழும்பு)
65 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள். நாளை ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 30 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 20 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 15 ஆயிரம் மில்லியன் ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. (5-6)

# வெளிநாட்டு கடன் தொகைகள் விரைவில் மறுசீரமைக்கப்படும்

## நிதி அமைச்சர்

(கொழும்பு)
இலங்கையின் வெளிநாட்டுக் கடனை விரைவில் மறுசீரமைக்க முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.



தற்போது அனைத்து கடன் வழங்குநர்களுடனும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போது இதனை இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதியின் சீன விஜயத்தின் போது மேலும் முன்னேற்றம் எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், மறுசீரமைப்பு செயல்முறை குறுகிய காலத்திற்குள் முடிவடையும் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கடன் மறுசீரமைப்பு செயற்பாடுகள் எதிர்வரும் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். என்றும் இந்த ஆண்டின் முதல் இரண்டு காலாண்டுகளில் பொருளாதாரம் சுருங்கினாலும், 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் அது வளர்ச்சியடைய ஆரம்பிக்கும் என நம்புவதாக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்தார். (5-6)

# நிரந்தர ஆணையாளர் ஒருவரை நியமிக்குமாறு கோரிக்கை

## உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

(கொழும்பு)
உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு நிரந்தர ஆணையாளர் ஒருவரை நியமிப்பதில் ஏற்படும் தாமதம் காரணமாக வருமான இலக்குகளை அடைவதில்பாரிய தடை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் அரசாங்கத்தை எச்சரித்துள்ளனர்.

கடந்த ஒன்றரை மாதங்களாக இறைவரித் திணைக்களத்திற்கு நிரந்தர ஆணையாளர் நியமிக்கப்படவில்லை. சட்டத்தின் அடிப்படையில் சில கடமைகளை செய்ய நிரந்தர ஆணையாளர் அவசியம் என்பதால், திணைக்களத்தின் செயற்பாடுகளில் பெரும் பகுதி முடங்கியுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எனவே உடனடியாக நிரந்தர ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாக வலுப்பெற்று வருகிறது.

இந்த ஆண்டு அரசின் வரி வருமான இலக்கு ஆயிரத்து 667 பில்லியன் ரூபாய்களாகும். எனினும் அரசின் வரி வருமான இலக்கை அடைவதற்கு 466 பில்லியன் ரூபாய் வருமானம் குறைவாக உள் ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. (5-6)

# இஸ்ரேலுக்கு நுழைய முற்பட்ட இலங்கையர்கள் இருவர் கைது

(ஜெருசலேம்)
அண்மையில் ஜோர்தானின் எல்லை வழியாக இஸ்ரேலுக்கு சட்டவிரோதமாக நுழைய முயன்ற இரு இலங்கைப் பெண்களை இஸ்ரேலியப் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

50 மற்றும் 44 வயதான பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர்கள் ஜோர்தானுக்கே திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், இப்பெண்களின் பாதுகாப்பு மற்றும் எதிர்காலம் குறித்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார். (5-6)

# தமிழ் மக்களின் ஆதரவினை பெறவில்லை என்ற வருத்தம் இல்லை

## நாமல் ராஜபக்ஷ

(கொழும்பு)
இலங்கையில் தமிழர்களது வாக்குகள் ராஜபக்ஷர்களுக்கு கிடைக்கவில்லை என்று நாங்கள் கவலையடையவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து தெரிவிக்கையில்,

தமிழர்களின் வாக்குகள் கிடைக்கவில்லை என்று நாங்கள் கவலையடைவில்லை. அடுத்த தலைமுறையினர் தேசிய அரசியல் கட்சிகளுக்கு வாக்களிப்பார்கள்.

எனது தந்தையான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமிழர்களுடன் இணக்கமாகவே செயற்படுகின்றார். தமிழ் பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் மதிக்கிறார். அவற்றைப் பின்பற்றுகிறார்.

மேலும் இலங்கையில் வாழும் தமிழர்களை அரவணைத்துக் கொண்டு செயற்படுவதே எமது பிரதான நோக்கமாக உள்ளது.



இனம், மதம் மற்றும் மொழி என்பவற்றுக்கு அப்பாற்பட்டு இலங்கையர் என்ற அடிப்படையில் அனைவருக்கும் சம வுரிமை வழங்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார். (5-6)

# புலமைப்பரிசில் வினாத்தாள்களை வெளியிட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## பரீட்சைகள் ஆணையாளர் அமித்ஜயசுந்தர

(கொழும்பு)
ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை முடிவடைந்த சில மணிநேரங்களுக்குள் சமூக வலைத்தளங்களில் குறித்த வினாத்தாள்களை வெளியிட்டவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ஐந்தாம்தர புலமைப் பரிசில் பரீட்சை நேற்று முன்தினம் 2 ஆயிரத்து 888 பரீட்சை நிலையங்களில் நடைபெற்றது. இந்த பரீட்சைக்கு 3 இலட்சத்து 37 ஆயிரத்து 956 பேர் தோற்றியிருந்தனர்.

பரீட்சை முடிவடைந்த நிலையில், சில மணிநேரங்களில் வினாத்தாள்கள் மற்றும் விடைத்தாள்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகின.


பரீட்சை நடத்தப்பட்ட சில மணித்தியாலங்களுக்குள் அதனை பகிரங்கப்படுத்த வேண் டாம் என பரீட்சை மண்டப பொறுப்பாளர் மற்றும் கண் காணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் அதேவேளை சமூக வலைத்தளங்களில் குறித்த வினாத்தாள்களை வெளியிட்டவர்அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஷாம்பா, இங்லிஸ் அசத்தல்

# மீண்டும் வெற்றிப் பாதையில் அவுஸ்திரேலியா தொடர் தோல்விகளால் துவளும் இலங்கை





2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று இடம்பெற்ற இலங்கை - அவுஸ்திரேலியவுக்கு இடையேயான போட்டியில் அவுஸ்திரேலியா அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

லக்னோவில் இடம்பெற்ற இப் போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதற்கமைய, அந்த அணி 43.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 209 ஓட் டங்களை .பெற்றுக்கொண்டது.

அணிசார்பில் அதிகபடியாக குசல் பெரேரா 78 ஓட்டங்களையும், பெத்தும் நிஸ்ஸங்க 61 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத் தனர்.

பந்துவீச்சில், அவுஸ்திரேலிய அணி யின் எடம் ஷம்பா 47 ஓட்டங்களையும் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்தநிலையில், 210 ஓட் டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 35.2 ஓவர்களில் 05 விக் கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அணிசார்பில் அதிகபடியாக, ஜோஷ் இங்லிஸ் 58 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில், இலங்கை அணி யின் தில்ஷான் மதுஷங்க 38 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக் களை கைப்பற்றினார். (7)



### உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023 புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 3 | 3 | 0 | 6 |
| 2 | நியூசிலாந்து | 3 | 3 | 0 | 6 |
| 3 | தென்னாபிரிக்கா | 2 | 2 | 0 | 4 |
| 4 | பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 4 |
| 5 | இங்கிலாந்து | 3 | 1 | 2 | 2 |
| 6 | ஆப்கானிஸ்தான் | 3 | 1 | 2 | 2 |
| 7 | பங்களாதேஷ் | 3 | 1 | 2 | 2 |
| 8 | அவுஸ்திரேலியா | 3 | 1 | 2 | 2 |
| 9 | இலங்கை | 3 | 0 | 3 | 0 |
| 10 | நெதர்லாந்து | 2 | 0 | 2 | 0 |





## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் ஆசிரியர்
**திருமதி.திலகவதி றொய்சி றெஜி குரூஸ்**
அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்
**சின்னப்பு லூக்காஸ் (ராசு)**

அவர்களின் பிரிவினால் துயருறும்
அவரது குடும்பத்தினருக்கு
எமது கண்ணீர் செபங்களை
காணிக்கையாக்குகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/சென்ஜோசப்ஸ் வித்தியாலயம்

(17487)

## முல்லைத்தீவு மேற்கு பனைதென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்

முல்லைத்தீவு மேற்கு பனை தென்னை வள.அபி.கூ.சங்கத்தில் பின்வரும் பதவிகளிற்கு வெளிவாரியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி :- கிராமிய வங்கி எழுதுநர்**
சம்பளக் குறியீடு :- 302 / 12
சம்பள அளவுத்திட்டம் :- 18820 - 170 x 10 - 185 x 10 - 22370

**02. பதவி :- அலுவலக சேவகர்**
சம்பளக் குறியீடு :- 317 / 15
சம்பள அளவுத்திட்டம் :- 17435 - 145 x 10 - 160 x 1 0 - 20485

**03. பதவி :- காரியாலய காவலாளி**
சம்பளக் குறியீடு :- 315 / 16
சம்பள அளவுத்திட்டம் :- 16975 - 135 x 10 - 150 x 10 - 19825

வயதெல்லையானது :- 18 – 45 வயதாகும்.

மேற்குறிப்பிட்ட பதவிகளிற்கான தகமைகளினை வடமாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் இணையத்தள முகவரி www.np.gov.lk இன் சுற்றுநிருபங்கள் பகுதியில் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் கீழ் http://np.gov.lk/cocoperative-employees-commission-circular-2021 என்ற இணைப்பில் பார்வையிட்டுக் கொள்ள முடியும் அல்லது சங்கத்துடன் தொடர்பு கொண்டு தகைமைகளினை பெற்றுக் கொள்ள முடியும்.

மேலதிக தொடர்புகளுக்கு :- **021 - 229 1388**
பொது முகாமையாளர் :- **077 - 405 1425**
விண்ணப்ப முடிவுத் திகதி :- **2023.10.30**

(C-7438)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்போக செய்கைக்கு முன்னதாகவே விவசாயிகளுக்கான உரங்கள் விநியோகிக்கப்படும்

## மஹிந்த அமரவீர

(கொழும்பு)


பெரும்போக பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே விவசாயிகளுக்கு தேவையான உரங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

உரங்கள் மற்றும் எரிபொருட்கள் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறுமா என்பது விவசாயிகளுக்கு இருக்கும் பிரதான பிரச்சினைகளாக காணப்படுகின்றது.

கடந்த போகத்திலும் அவர்கள் வைத்த நம்பிக்கையை நாங்கள் உறுதிப்படுத்தினோம்.

மூன்று வகையான உரங்களையும் விவசாயிகளுக்கு வழங்கியதன் ஊடாக வெற்றிகரமான அறுவடையை பெற முடிந்தது.

இம்முறையும் பயிர்ச்செய்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே அதற்கு தேவையான



உரங்களை அனுப்பி விவசாயிகளிடம் நம்பிக்கையை ஏற்படுத்தி இந்த போகத்தையும் வெற்றியுடன் முன்னெடுக்கவே எதிர்பார்ப்பதாக தெரிவித்தார். (5-6)

# போர் தீர்வாக அமையாது பாலஸ்தீன தூதுவரிடம் மகிந்த



(கொழும்பு)

பாலஸ்தீன தூதுவருடன் கலந்துரையாடிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, உலகில் எங்கும் பயங்கரவாதத்திற்கு இடமில்லை என்றும் போர் தீர்வாக அமையாது எனவும் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவை தெரிவிக்கும் வகையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று கொழும்பில் உள்ள பாலஸ்தீன தூதரகத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

மேலும் யுத்த காலங்களில் இலங்கை எதிர்கொண்ட சவால்களை சுட்டிக்காட்டிய முன்னாள் ஜனாதிபதி, சமாதானத்தின் அவசியத்தையும் வலியுறுத்தியிருந்தார்.

பாலஸ்தீனத்துடனான ஒற்றுமைக்கான இலங்கை சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர் என்ற முறையில் தான் பாலஸ்தீனத்தின் கொள்கையை ஆதரிப்பதாகவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (5-6)

# தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயத்தில் அரசு உள்ளது

## திஸ்ஸ அத்தநாயக்க

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.


எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை யும் மாகாணசபைத் தேர்தலையும் பிற்போட்டு, அரசாங்கம் ஏற்கனவே மக்களின் அடிப்படை உரிமையை மீறியுள்ளது.

இந்த நிலையில், அடுத்தாண்டு செப்டெம்பரில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயத்தில் அரசாங்கம் உள்ளது.

எனவே, இந்தத் தேர்தலை பிற்போடும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லை.



இதற்கான முயற்சியை அரசாங்கம் மேற்கொண்டால் நாம் அனைத்து தரப்பினருடனும் ஒன்றிணைந்து எதிர்ப்பினை வெளியிடுவோம்.

அரசாங்கத்திற்கு தேர்தல் ஒன்று தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால் மக்கள் தேர்தலொன்றை எதிர்பார்த்து கொண்டு இருக்கிறார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (5-6)


மணிவிழா வாழ்த்து



திருமதி. சுபத்திராதேவி சுரேந்திரன்
(சங்கீத ஆசிரியர்) 13.10.2023

சேவை விபரம்
26.03.1990-12.01.1997
யா/ சித்தங்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்
13.01.1997-20.06.2010
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்
21.06.2010-13.10.2023
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

எமது பாடசாலையில் சேவையாற்றி ஓய்வுபெற்ற மணிவிழா நாயகியை வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.


# இராசிபலன்

17.10.2023
புரட்டாதி 30, செவ்வாய்க்கிழமை
திருதியை பின்னிரவு 12.48 மணிவரை

விசாகம் முன்னிரவு 8.46 மணிவரை
சுபநேரம் -10.32-12.02 மணிவரை
இராகுகாலம்-3.02- 4.32 மணிவரை

சந்திராஷ்டமம் - அச்சுவினி, பரணி.

வளவன்

**மேஷம்**: மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**ரிஷபம்**: காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**மிதுனம்**: ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கடகம்**: புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ளும் எண்ணம் உருவாகும், எதிர்கால நலன் கருதிய முயற்சிகள் கைகூடும்.

**சிம்மம்**: தொலைபேசி வழியில் உற்சாகம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.

**கன்னி**: கொடுக்கல் -வாங்கல்கள் ஒழுங்காகும், வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், நீண்ட நாளைய பிணக்குகளில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், தன்னம்பிக்கையோடு செயற்படும் நாள்.

**துலாம்**: பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், எதிர்பாராத தன வரவுகள் இல்லம் வந்து சேரலாம், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும்.

**விருச்சிகம்**: வழிபாடு குதூகலம் தரும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், விரும்பிய காரியம் விரும்பியபடியே கைகூடும், கற்பனை மிகுதியான நாள்.

**தனுசு**: எதிர்பாராத ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், திட்டமிட்ட காரியத்தில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**மகரம்**: மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.

**கும்பம்**: நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.

**மீனம்**: அரைகுறையாக இருந்த பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், வர வேண்டிய வரவுகள் வந்து சேரலாம்.

சாதுரியம் இல்லாமல் எதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவசமயத்தைப் பாதுகாக்க அனைவரும் விழிப்புடன் செயற்படவேண்டும்

## கலாநிதி. ஆறு. திருமுருகன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**பாரம்பரியமான எமது நாட்டின் சுதேசிகளின் சமயமான சைவசமயத்தை அழிப்பதற்கு மறை முகமாக எடுக்கும் முயற்சிகளினை நாம் தெரிந்தும் தெரியாமலும் இருக்க முடியாது என கலாநிதி. ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.**



ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த ஊடக அறிக்கையி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிறிஸ்தவ மதத்தலைவர்கள் எங்களுடன் மிகவும் அன்பாக பழகுகின்றார்கள். பொதுக்கூட்டங்களிலும் விழாக்களிலும் மிகவும் நேசமுடன் பேசுகின்றார்கள். ஆனால் சைவ மக்களுக்கு வந்துள்ள இடையூறுகளை அவர்களைச் சார்ந்தவர்கள் செய்கின்றார்கள் என்பதை அந்த மதத்தலைவர்கள் ஏற்றுக் கொள்வதாக இல்லை.

அடுத்த குடிசன மதிப்பீடு வரும் போது சமய ரீதியான மக்களின் தொகையில் எவ்வளவு மாற்றம் வரும் என்பதை வரலாறு தெரிந்தவர்கள் நன்கறிந்து கொள்வார்கள்.

பல சைவப் பாடசாலைகள் தீவகத்திலே மூடப்படுகின்ற நிலையில், கிறிஸ்தவ அமைப்பொன்று தற்பொழுது மூன்று மாடிக் கட்டடத்தில் சர்வதேச பாடசாலை ஒன்றை கட்டி இயக்குகின்றது.

இதன் நோக்கம் எஞ்சியுள்ள சைவப் பாடசாலைகளிற்கும் மூடுவிழா நடத்துவதற்கே ஆகும்.

இதை கல்வியாளர்களும் உணர்வதாக இல்லை. அரசியல்வாதிகளும் உணர்வதாக இல்லை.

திருக்கேதீஸ்வர வளைவு உடைக்கப்பட்ட போது தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதில் தலையிட்டு தீர்க்க முற்படாத காரணத்தால் சைவர்களிற்கும் கிறிஸ்தவர்களிற்குமான இடைவெளி அங்கு அதிகரித்துச் செல்கின்றது.

தற்பொழுது எங்கு பார்த்தாலும் மதமாற்ற சபைகளை அமைத்து சைவர்களை மத மாற்றம் செய்யும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு அருகில் இரண்டு வீடுகளை வாங்கி மதமாற்றப் பணிகளை மேற்கொள்ள எடுத்த முயற்சியினை நாங்கள் தடுத்து நிறுத்தியுள்ளோம்.

இந்நிலை மாற வேண்டும் என்பதுடன் உண்மையான சுதேசிகளுடைய சைவசமயத்தைப் பாதுகாக்க அனைவரும் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும் என அவ்வறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (5-6)

## ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான துவிச்சக்கரவண்டிகள், கோடரிகள், சவள்கள், மண்வெட்டிகள், பிக்கான், முள்ளு மண்வெட்டி, மீன் பிடி வலை, தகரங்கள் மற்றும் தண்ணீர் மோட்டர்கள் என்பன எதிர்வரும் 2023.10.21 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (5-6)

## சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். வண். வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தான சங்கடஹர சதுர்த்தி உற்சவம் நாளை புதன் கிழமை மாலை 3.30 மணிக்கு மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை நடைபெற்று விநாயகப்பெருமான் திருவீதி வலம் வருவார் என பிரதமகுருக்கள் சிவஸ்ரீ விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (5-6)

## நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல் குருநகர் பிரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள குருநகர் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி (ARV) ஏற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாய்களுக்குத் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அத்துடன் ஓர் நாய்க்கான உரிமக் கட்டணமாக 50 ரூபாய் அறவிடப்படும் என யாழ்.மாநகரசபையின் சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார்.

அந்தவகையில் நாளை புதன்கிழமை முற்பகல் 9-11 மணிவரை பழைய பூங்கா வீதி, முற்பகல் 11- பிற்பகல் 1 மணிவரை புதிய வீட மைப்பு திட்ட வீதி, பிற்பகல் 2.30 - 4 மணி வரை தொடர்மாடி குடியிருப்பு பகுதியிலும்,

19 ஆம் திகதி முற்பகல் 9-11 மணிவரை குருநகர் பொலிஸ் நிலையத்துக்கு அருகில், முற்பகல் 11- பிற்பகல் 1 மணி வரை பழைய பூங்கா சிறுவர் நீதிமன்றப்பகுதி, பிற்பகல் 2.30 - 4 மணிவரை திருநகர் மாணவர் படிப்பகத்திலும்,

20 ஆம் திகதி முற்பகல் 9-11 மணிவரை இராஜசிங்கம் வீதி மாதா சிலையடி பகுதி, முற்பகல் 11- பிற்பகல் 1 மணிவரை சென்பற்றிக்ஸ் வீதி சேமகாலை அருகில், பிற்பகல் 2.30 - 4 மணிவரை சென்பற்றிக்ஸ் வீதி கதிற்றல் வீதி சந்தி அருகிலும்,

23 ஆம் திகதி முற்பகல் 9-11 மணிவரை இராஜேந்திர வீதி, முற்பகல் 11- பிற்பகல் 1மணி வரை டேவிற் வீதி கடற்கரை வீதி சந்தி அருகில், பிற்பகல் 2.30 - 4 மணிவரை மவுண்காமல் வீதி பாங்சால் வீதியிலும்,

24 ஆம் திகதி முற்பகல் 9-11 மணிவரை சென்றோக்ஸ் சனசமூக நிலையம், முற்பகல் 11- பிற்பகல் 1 மணிவரை றெக்கிளிமேசன் சனசமூக நிலையம்,பிற்பகல் 2.30 - 4 மணிவரை புதிய கடற்கரை தண்ணீர்தாங்கி சந்தியிலும்,

25 ஆம் திகதி முற்பகல் 9-11 மணிவரை தண்ணீர் தாங்கி 4 ஆம் 5ஆம் குறுக்குத்தெரு, முற்பகல் 11- பிற்பகல் 1மணிவரை சென் ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலை முன்பாக, 2.30 - 4 மணி வரை 2 ஆம் குறுக்குத் தெரு குருநகரிலும்,

26 ஆம் திகதி முற்பகல் 9-11 மணிவரை ஜல்பிளாண்டா வீதி, முற்பகல் 11- பிற்பகல் 1 மணிவரை குருநகர் சனசமூக நிலையம் முன்பாக,பிற்பகல் 2.30 - 4 மணிவரை கடற்கரை வீதி 1 ஆம் குறுக்குத்தெரு சந்தியிலும்,

27 ஆம் திகதி முற்பகல் 9-11 மணிவரை பாங்சால் வீதி 4 ஆம் குறுக்குத்தெரு சந்தி, முற்பகல் 11- பிற்பகல் 1 மணிவரை யாகப்பர் ஆலயத்திற்கு அருகாமை, பிற்பகல் 2.30 - 4 மணிவரை புதுமை மாதா ஆலயத்திற்கு அருகாமையிலும்,

30 ஆம் திகதி முற்பகல் 9-10.30 மணிவரை ஓடக்கரை வீதி, முற்பகல் 10.30 பிற்பகல் 12 மணிவரை யூபிவி மகப்பேற்று நிலையம் முன்பாக, பிற்பகல் 12-1 மணி வரை குருநகர் சின்ன ஆஸ்பத்திரி முன்பாக, பிற்பகல் 2.30-4 மணிவரை செபஸ்ரியார் கோவில் அருகாமை ஆகிய இடங்களில் வைத்து நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (5-6)

## மாம்பழ உற்பத்தி வலயத்தை பார்வையிட்ட விவசாய அமைச்சர்



(சாவகச்சேரி)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் கிராமத்தில் உள்ள ரொம்ஈஜெசி மாம்பழ உற்பத்தி வலயத்தை விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் பார்வையிட்டிருந்தார்.

கடந்த 2018ஆம் ஆண்டு விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மேற்படி மாம்பழ உற்பத்தி வலயமானது 500 செய்கையாளர்களை உள்ளடக்கியுள்ள நிலையில் விவசாய அமைச்சர் செய்கையாளர்களைச் சந்தித்து அவர்களுடைய குறை நிறைகளை கேட்டறிந்திருந்தார்.

இதன்போது விவசாயிகள், குரங்குகளை கட்டுப்படுத்த வாயுத் துப்பாக்கி,வீதிப் புனரமைப்பு மற்றும் மாம்பழத்தை சந்தைப்படுத்துவதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் விவசாய பிரதி அமைச்சருமான அங்கஜன் இராமநாதனுடைய ஏற்பாட்டில் குறித்த சந்திப்பு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-6-30)

## பாராளுமன்ற அமர்வு இன்று ஆரம்பம்

(கொழும்பு)

பாராளுமன்றம் இன்று 17 முதல் 20 வரை கூடவுள்ளதாகப் பாராளுமன்றத்தின் பதில் செயலாளர் நாயகம் சமிந்த குலரத்ன தெரிவித்தார்.

கடந்த 6 ஆம் திகதி பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் இந்த வாரத்துக்கான பாராளுமன்ற அலுவல்கள் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டங்களை தோற்றுவிக்க மக்களை குழப்பும் ஜே.வி.பி

## மஹிந்தானந்த



(கொழும்பு)

நாடு வழமைக்கு திரும்பியுள்ள நிலையில் மக்களை குழப்பி மீண்டும் போராட்டத்தை தோற்றுவிக்க மக்கள் விடுதலை முன்னணியினர் முயற்சிக்கின்றனர். மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாவலப்பிட்டி நகரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


அவர் மேலும் குறிப்பிட்டதாவது, பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் 2019 ஆம் ஆண்டு நாட்டு மக்கள் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

கொவிட் பெருந்தொற்று தாக்கம் ஏனைய நாடுகளை காட்டிலும் இலங்கைக்கு நேரடியாக தாக்கம் செலுத்தியது. சுற்றுலாத்துறை சேவை கைத்தொழில் வீழ்ச்சி, வெளிநாட்டு கையிருப்பு பற்றாக்குறையால் எரிபொருள், எரிவாயு உட்பட அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி தடை மற்றும் 13 மணித்தியாலங்கள் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் நெருக்கடிக்குள்ளான மக்கள் ஜனநாயக ரீதியில் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

பொருளாதார நெருக்கடி, அரசியல் நெருக்கடியான தீவிரமடைந்த சூழ்நிலையில் அரசியலமைப்பின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை இடைக்கால ஜனாதிபதியாக தெரிவு செய்தோம்.

இந் நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை தொடர்ந்து நாடு தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. ஜனாதிபதியின் சீன விஜயம் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கு சாதகமாக அமையும் என தெரிவித்தார். (5-6)

# ஐ.நா வதிவிட பிரதிநிதியை சந்தித்த கடற்றொழில் அமைச்சர்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்றூ பிரான்ஸியை நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்றொழில் அமைச்சில் சந்தித்தார்.

இச் சந்திப்பின் போது பொருளாதார சவால்களுக்கு மத்தியில் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் மற்றும் அவர்கள் எதிர்பார்க்கும் உதவிகள் தொடர்பாக அமைச்சர் கலந்துரையாடினார்.

குறித்த சந்திப்பின்போது இராஜாங்க அமைச்சர் பியால் நிசாந்த, அமைச்சர்களின் செயலாளர்கள் மற்றும் அமைச்சரின் ஆலோசகர் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-6)



## பெயர் மாற்றம்

தாளையடி வீதி, மயிலிட்டியில் வசிக்கும் மில்லிகா ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை செல்வ மல்லிகா எனப் பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயக குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

உண்மையுள்ள
செல்வமல்லிகா.

(17480)


# தங்க முலாம் பூசப்பட்ட பந்துகளுடன் நால்வர் கைது



(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கொக்மாடுவ நுழைவாயிலில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படையினர் காரில் இருந்ததாக சந்தேகிக்கப்படும் 949 சிறிய தங்க முலாம் பூசப்பட்ட பந்துகளுடன் காரில் பயணித்த நால்வரை கைது செய்துள்ளனர்.

தனமல்வில, அதிலிவெவ மற்றும் பயாகல ஆகிய பகுதிகளில் வசிக்கும் 35, 31, 22 மற்றும் 21 வயதுடைய நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிகம பிரதேசத்தில் உள்ள சகோதரர் வீட்டிற்கு தாம் வந்ததாக சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர். இந்த தங்க முலாம் பூசப்பட்ட சிறிய பந்துகள் சில வாரங்களுக்கு முன்னர் கண்டி பிரிமத்தலவில் இருந்து வீட்டில் உள்ள பித்தளை விளக்குகளுக்கு பதிலாக கொள்வனவு செய்யப்பட்ட தாகவும் சந்தேக நபர்கள் தெரிவித்துள்ளனர். (5-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 280 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 400 | 400 |
| தக்காளி | 300 | 300 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 140 | 150 | 150 |
| கோவா | 160 | 150 | 150 | 200 |
| கரட் | 200 | 230 | 280 | 300 |
| பூசணி | 80 | 80 | 70 | 100 |
| புடோல் | 100 | 140 | 120 | 200 |
| வாழைக்காய் | 160 | 180 | 160 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 340 | 300 | 450 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 240 | 280 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 120 | 180 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 | 150 |
| பயற்றங்காய் | 350 | 300 | 250 | 300 |
| லீக்ஸ் | 160 | 160 | 200 | 150 |
| பீற்றூட் | 120 | 140 | 140 | 200 |
| கறிமிளகாய் | 300 | 250 | 300 | 450 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 | 200 |
| போஞ்சி | 400 | 450 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 160 | 220 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 80 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1300 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 400 | 400 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 350 | 350 | 400 | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 160 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 160 |

# பெற்றோலியக் கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள் இருவர் இராஜினாமா

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் உயர் அதிகாரிகள் இருவர் திடீரென தமது பதவியை இராஜினாமா செய்துள்ள சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அண்மைக் காலமாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் விற்பனை மற்றும் நிதித் துறைகளில் பணியாற்றி வந்த தலைவர்கள் உட்பட பல அதிகாரிகள் தமது பதவியை இராஜினாமா செய்தவர்களில் பெரும்பாலானோர் வேறு வேலைகளுக்காக வெளி நாடுகளுக்குச் சென்றுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

இதன் காரணமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகக் கட்டமைப்பில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுவரும் நிலையில், வெற்றிடங்களுக்கு வேறு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய களஞ்சிய நிலையத்தின் தலைவர் மொஹமட் உவைஸ் தனிப்பட்ட காரணங்களுக்காக தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (5-6)

# வேகக் கட்டுப்பாட்டை இழந்து குடைசாய்ந்த முச்சக்கரவண்டி



(கொழும்பு)

தெனியாய - சீத்தா எலிய பகுதியில் முச்சக்கர வண்டி குடைசாய்ந்து விபத்திற்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இவ் விபத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கர வண்டி, சுமார் 13 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.


விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த சாரதி மற்றும் மேலும் 2 பயணிகள் காயமடைந்துள்ளனர். இவர்களில் 47 வயதான பெண்ணொருவர் பலத்த காயமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

ஏனைய இருவரும் தெனியாய மருத்துவனையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## "சைக்" சிறுகோள் ஆய்வுக்காக விண்கலத்தை ஏவிய நாசா



(வோஷிங்டன்)

நாசா 'சைக்' சிறுகோளை ஆய்வு செய்யும் விண்கலத்தினை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி உள்ளது.

பால்வெளி மண்டலத்தில் உள்ள செவ்வாய் கிரகத்திற்கும் வியாழனுக்கும் இடைப்பட்ட தூரத்தில் சிறுகோள்கள், விண்கற்கள் ஆகியவை அதிக அளவில் குவிந்து காணப்படுகின்றன. அங்கு அமைந்துள்ள சிறுகோள்களில் ஒன்றாக "சைக்" விளங்குகிறது. முழுக்க முழுக்க இரும்பு, நிக்கல் போன்ற உலோகங்களாலான அந்த சிறுகோளை ஆய்வு செய்ய நாசா திட்டமிட்டது.

அதன்படி ஸ்பெக்ஸ்-எக்ஸ் நிறுவனத்துடன் கூட்டு சேர்ந்து அந்த சிறுகோளுக்கு விண்கலனை ஏவி உள்ளது. புளோரிடா மாகாணம் கேப் கேனவேரலில் உள்ள கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து விண்கலன் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டு உள்ளது.

பூமியில் இருந்து 50 கோடி கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள சைக் சிறுகோளை ஆறு ஆண்டுகளுக்குள் சென்றடையும்படி நாசா வடிவமைத்துள்ளது.

நாசா கணிப்பின்படி செவ்வாய் கிரகத்தை அடைந்த பின்னர் குறைந்த உந்துதல் கொண்ட மின்சார உந்து விசை என்னும் நவீன முறையை பயன்படுத்தி சிறுகோள் குவியலை கடந்து பயணித்து சைக்கை நெருங்கும்.

பின்னர் 4 நிலை சுற்றுப்பாதையை அமைத்து கொண்டு பயணித்த பின்னர் சைக்கில் இறங்கி ஆய்வுகள் மேற்கொள்ளும் என நாசா ஆய்வாளர்கள் தெரிவித்தனர். (5-6)

# போரை முடிவுக்கு கொண்

# இஸ்ரேலுக்கு எதிராக 21 நா

(ஜெருசலேம்)

**இஸ்ரேலின் காசா முற்றுகையை முடிவுக்கு கொண்டுவரக் கோரியும் போரைக் கைவிடவேண்டும் என தெரிவித்து இஸ்ரேலுக்கு எதிராக 21 நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.**

(ஜெருசலேம்)

ஒரு வாரத்திற்கு முன்னர் இஸ்ரேல் மீது ஹமாஸின் திடீர் தாக்குதலைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையே பதற்றங்கள் அதிகரிப்பது குறித்து சர்வதேச சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

இருப்பினும் இஸ்ரேல் தொடர்ந்து காசா மீது குண்டு வீசியும் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் உள்ள பாலஸ்தீனியர்களைத் தாக்கியும் வருகிறது.

இந்த நிலையில் பல நாட்டு அரசாங்கங்கள் இஸ்ரேலின் இந்த நடவடிக்கைகளை வெளிப்படையாக விமர்சித்து வருகின்றன.

அல்ஜீரிய வெளிவிவகார அமைச்சகம் தெரிவிக்கையில், சர்வதேச மனிதாபிமான சட்டங்களை இஸ்ரேல் காற்றில் பறத்தியுள்ளது. பாலஸ்தீன மக்களை பாதுகாக்க சர்வதேச நாடுகள் உடனடியாக களமிறங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

பாலஸ்தீன மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதாக ஆபிரிக்க ஒன்றியம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் இந்த மனிதாபிமானமற்ற நடவடிக்கை ஏற்பதாக இல்லை என பிரேசில் கண்டனம் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன நாடுகள் பேச்சுவார்த்தைக்கு தயாராக வேண்டும் என கொலம்பிய ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ அழைப்பு விடுத்துள்ளார்.

இதனிடையே, இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தில் நடக்கும் வன்முறைகளுக்கு கியூபா கண்டனம் தெரிவித்துள்ளது. பாலஸ்தீனப் பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்ததே இந்த வன்முறைகளுக்கு காரணம் என இந்தோனேசியா விமர்சித்துள்ளது.

ஈரானும் ஈராக்கும் தங்களின் ஆதரவை பாலஸ்தீனத்துக்கு வெளிப்படுத்தியுள்ளனர். இதனிடையே மின்சாரம், குடிநீர்

## நியூயோர்க்கில்

# இஸ்ரேலை எதிர்த்து பாரிய போராட்டம்



(நியூயோர்க்)

இஸ்ரேல்-ஹமாஸ் மோதல்களின் பின்னணியில் ஆயிரக்கணக்கான எதிர்ப்பாளர்கள் பாலஸ்தீனத்தை ஆதரித்து நியூயோர்க்கில் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக நியூயோர்க்டைம்ஸ் சதுக்கத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இஸ்ரேல் ஹமாஸ் மோதலின் பின்னணியில் ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்களின் பங்கேற்றலுடன் இந்த போராட்டம் இடம் பெற்றுள்ளது.

பாலஸ்தீனியர்களை இஸ்ரேல் கொன்று குவிப்பதாக போராட்டக்காரர்கள் இஸ்ரேலை விமர்சித்துள்ளனர்.

இஸ்ரேல் நடத்திய தாக்குதல்கள் ஆரம்பம் மட்டுமே என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியதற்கும் இங்கு கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

இஸ்ரேலை ஆதரிப்பதாக அமெரிக்கா தொடர்ந்து கூறி வரும் பின்னணியில், பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக நியூயோர்க் மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். (5-6)

## ரஷ்யா மீது உக்ரைன் ஆளில்லா விமானத் தாக்குதல்



(கீவ்)

உக்ரைன் இராணுவம் நேற்று ரஷ்யா மீது திடீர் ஆளில்லா விமான தாக்குதல் நடத்தியுள்ளது.

ரஷ்யாவில் உள்ள குர்ஸ்க் பகுதி மற்றும் பேல்கோரட் பகுதியை குறி வைத்து குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் உக்ரைன் இராணுவத்தினர் கீவ்வில் இருந்து ஆளில்லா விமானங்களை செலுத்தியுள்ளனர். இந்நிலையில் உக்ரைன் இராணுவத்தின் ஆளில்லா விமானங்கள் வருகையை அறிந்த ரஷ்ய வான் பாதுகாப்பு தளபாடங்கள் அதனை மறித்து எதிர்த்தாக்குதல் நடத்தியிருந்தன.

இந்த தாக்குதலில் 25 இற்கும் அதிகமான ஆளில்லா விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இந்நிலையில் உக்ரைனுக்கு பதிலடி தரும் வகையில் ரஷ்ய இராணுவம் தாக்குதல் நடத்த தயாராகி வருவதாக இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ண்டுவரக் கோரி
# ...நாடுகள் கண்டனம்






மற்றும் உணவு விநியோகத்தை தடுப்பது என்பது மனிதத் தன்மையற்ற செயல் என அயர்லாந்து பிரதமர் இஸ்ரேலை கடுமையாக விமர்சித்துள்ளார்.

காஸா மீதான இஸ்ரேலின் தாக்குதலை தடுத்து நிறுத்த சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என குவைத் கேட்டுக் கொண்டுள்ளது.

மலேசியா, மாலைதீவு, நோர்வே, ஓமன், அயர்லாந்து, கத்தார், ரஷ்யா, சிரியா, தென்னாபிரிக்கா, வெனிசுலா, மொராக்கோ ஆகிய நாடுகளும் இஸ்ரேலுக்கு கண்டனம் தெரிவித்துள்ளதுடன் பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவும் தெரிவித்துள்ளனர். (5-6)

## பாதுகாப்பு அச்சுறுத்தலால்
# பிரான்ஸ் முழுவதும் குவிக்கப்பட்ட 7 ஆயிரம் இராணுவ வீரர்கள்

(பாரிஸ்)

பிரான்ஸில் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர்.

பிரான்ஸில் தடையை மீறி பாலஸ்தீன ஆதரவு பேரணி இடம்பெற்றது. மேலும் அதில் வெடித்த வன்முறையை பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் தடியடி நடத்தியும் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

நாட்டின் அராஸ் நகரில் உள்ள ஒரு பாடசாலையில் நுழைந்த மாணவன் ஒருவன் பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக குரல் எழுப்பியபடி கத்திக்குத்து தாக்குதலில் ஈடுபட்டார்.



பாலஸ்தீன ஆதரவு போராட்டம் மற்றும் கத்திக்குத்து சம்பவங்கள் காரணமாக பிரான்ஸில் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 7 ஆயிரத்திற்கும் அதிகமான இராணுவ வீரர்கள் நாடு முழுவதும் களமிறக்கப்பட்டு பாதுகாப்பு பணி மேற்கொள்ள பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மாக்ரோருக் உத்தரவிட்டுள்ளார். (5-6)

# ஹமாஸ் அமைப்பினர் நிபந்தனையின்றி பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டும்
## அன்டோனியோ குட்டரெஸ்



(நியூயோர்க்)

ஹமாஸ் அமைப்பினர் எவ்வித நிபந்தனைகளும் இன்றி பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் திடீரென தாக்குதல் நடத்தினர். அத்துடன் பலர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டுள்ளனர். இதற்கு இஸ்ரேல் காஸா மீது ஏவுகணைகளை வீசி பதிலடி கொடுத்து வருகிறது. இதனால் இரு பக்கமும் பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் எக்ஸ் தளத்தில் விடுத்துள்ள செய்தியில், மத்திய கிழக்கில் நாம் படுகுழியின் விளிம்பில் இருப்பதால் எனக்கு இரண்டு மனிதாபிமான வேண்டுகோள்கள் உள்ளன.

எவ்வித நிபந்தனைகளும் இன்றி ஹமாஸ் அமைப்பினர் பணயக் கைதிகளை விடுவிக்க வேண்டும் எனவும் காசாவில் உள்ள பொதுமக்களுக்கு தேவையான மனிதாபிமான உதவிகள் விரைவில் கிடைக்க இஸ்ரேல் அனுமதிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார். (5-6)

## ஆப்கானிஸ்தானில் மீண்டும் நிலநடுக்கம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானை 6.3 ரிக்டர் அளவுகொண்ட நிலநடுக்கம் மீண்டும் உலுக்கியுள்ளது. நாட்டின் மேற்குப் பகுதியை நேற்று முன்தினம் உலுக்கிய நிலநடுக்கத்தில் குறைந்தது இருவர் உயிரிழந்துள்ளனர்.

150 இற்கும் அதிகமானோர் காயமுற்றனர். ஏற்கனவே அந்தப் பகுதியில் சுமார் ஒரு வாரத்திற்குள் ஏற்பட்ட தொடர் நிலநடுக்கங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி இருந்தனர்.

கடந்த 8 நாட்களில் ஹெராட்டில் 7 நிலநடுக்கங்களும் பல பின் அதிர்வுகளும் நேர்ந்ததாக ஐக்கிய நாட்டு நிறுவன அதிகாரிகள் கூறினர்.

குறைந்தது 1,400 பேர் மண்டனர் 1,800இற்கும் அதிகமானோர் காயமுற்றனர். பாதிக்கப்பட்டோரில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளும் என்று ஐக்கிய நாட்டு நிறுவனம் தெரிவித்தது. (5-6)

ன்
ல்



பாது
னை
தல்
25
ஆளி
சுட்டு
லை
நிலை
ஷ்ய
நட
இரா
ரிகள்
5-6)

# காசாவுக்கு நீர் விநியோகிப்பதற்கு இஸ்ரேல் பிரதமர் ஒப்புதல்

(காசா)

காசா பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்ய இஸ்ரேல் ஒப்புதல் அளித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் போராளிகள் மேற்கொண்ட பயங்கரத் தாக்குதலைத் தொடர்ந்து காசாவுக்கான எரிபொருள், மின்சாரம், தண்ணீர், இணையதளம் என அனைத்து சேவைகளையும் இஸ்ரேல் நிறுத்தியிருந்தது.

இதனால் காசாவில் சுமார் 50,000 கர்ப்பிணிகள் உட்பட லட்சக்கணக்கான மக்கள் உணவு மற்றும் குடிநீர் இன்றித் தவித்து வருகின்றனர்.



இந்நிலையில் அமெரிக்கா - இஸ்ரேல் இடையே அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையினையடுத்து இஸ்ரேல் பிரதமர் காசாவுக்கு நீர் விநியோகம் செய்ய ஒப்புதல் அளித்துள்ளார்.

இதேவேளை, போரினால் காசாவில் 2,329 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் இஸ்ரேலில் இதுவரை 1,300 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் எனவும் சர்வதேச ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் பொலிஸார்களுக்கு எதிராக நடவடிக்கை

## பொலிஸ் ஊடகப்பிரிவு

(கொழும்பு)

பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் பொலிஸ் நிலைய கட்டளைத் தளபதிகள் உள்ளிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தலைமையக சுற்றறிக்கை மற்றும் பொலிஸ் நிலையங்களில் மக்களிடம் இருந்து பெறப்படும் முறைப்பாடுகள் தொடர்பான அறிவுறுத்தல்களுக்கு அமைய செயற்படாத ஒன்பது பொலிஸ் உத்தியோகத்தர்கள் பதவியில் இருந்து நீக்கப்படவுள்ளதாக அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் நடத்திய விசாரணையில் இந்த உண்மைகள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# தலைமன்னாரில் போதைப்பொருட்கள் மீட்பு



(மன்னார்)


இலங்கை கடற்படையினரால் தலைமன்னார் உறுமலை கடற்கரைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் மூலம் 4 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் போதைப் பொருள், சுமார் 1 கிலோ ஹெரோயின் மற்றும் 5 கிலோவுக்கும் அதிகமான ஹாஷிஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளன.

கடற்படையினர் நேற்று அதிகாலை தலைமன்னார் கிராம பகுதி கடற்கரை பகுதியில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டதோடு கடற்கரையில் சந்தேகத்திற்கிடமான படகு ஒன்றை சோதனை செய்த போது சுமார் குறித்த போதைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட போதைப்பொருளின் சர்வதேச மதிப்பு 94 மில்லியன் என கடற்படை தெரிவித்துள்ளது. கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் மற்றும் படகு என்பன மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.மேலதிக விசாரணைகளை தலை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (5-6-285)

# எரிபொருள் கையிருப்பை முகாமைத்துவம் செய்ய நடவடிக்கை

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் கீழ் எரிபொருள் இருப்பை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுதாபணம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல்-பாலஸ்தீனத்திற்கு இடையே யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சூழலில் எதிர்வரும் இரண்டு மாதங்களின் பின்னர் நாட்டில் எரிபொருள் கையிருப்பு எவ்வாறு அமையப்போகின்றது என்பது குறித்து எரிசக்தி அமைச்சு மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுதாபனம் இணைந்து கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளன.

எவ்வாறாயினும் மீண்டும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுமாயின் முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட கியூஆர் முறையை மீண்டும் நடை முறைப்படுத்துவதா அல்லது வேறு நடவடிக்கைகளை முன்னெடுப்பதா என்பது குறித்து கலந்துரையாடப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேநேரம் சினோபெக் நிறுவனம் நாட்டில் வெற்றிகரமாக எரிபொருள் விநியோகத்தை முன்னெடுத்து செல்வதனால் எரிபொருள் தட்டுபாடு ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவடையும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுதாபனம் தெரிவித்துள்ளது. (5-6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2940

### தர்மினி




### சரண்

Bigboss என்றால் என்ன என்று தெரியுமா?



தின்னைவேலி சந்திக்கு பக்கத்தில இருக்கிற அப்பக்கடை தானே?

### கமல்

அரை மணிநேரம் கை வலிக்க தொட்டிலை ஆட்டிவிட்டு, குழந்தை தூங்கிட்டானா என்று தொட்டிலுக்குள் எட்டிப் பார்த்தா கோமாளியைப் பார்த்த மாதிரி சிரிக்குது.



### கவி




### தமிழ்

தேவைக்கும் ஆசைக்கும் என்ன வித்தியாசம்?



ரொம்ப பசிக்குதுன்னு சோறு சாப்பிட்டா அது தேவை. சோறு சாப்பிடும் போதே ருசிக்கு மசாலா வடை கேட்கிறாய் பாரு அதுதான் ஆசை.

### அனு

எங்க அம்மா குண்டூசி வாங்கிட்டு வர சொன்னாங்க. நானும் ஏழு கடை ஏறி இறங்கினான். எல்லாக் கடையிலையும் ஒல்லியாத்தான் இருக்குது.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15 இந்திய மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(மன்னார்)

தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கடந்த சனிக்கிழமை மாலை 2 படகுகளுடன் கைது செய்யப்பட்ட 15 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் நேற்று திங்கட்கிழமை மாலை உத்தரவிட்டார்.

கைது செய்யப்பட்ட 15 இந்திய மீனவர்களும் தலைமன்னார் கடற்படை முகாமிற்கு கொண்டு வரப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை மலேரியா பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கடற்படையின் ஆரம்பகட்ட விசாரணைகளின் பின்னர் மீனவர்கள் அனைவரும் மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளினால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டதை தொடர்ந்து கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த 15 மீனவர்கள் நேற்று மாலை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (5-6)

## கடும் வறட்சி காரணமாக கச்சான் விளைச்சலில் வீழ்ச்சி

(தருமபுரம்)



பல லட்சம் ரூபா செலவழித்து ஜம்போ கச்சான் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் தற்போதைய வறட்சியால் ஒரு கிலோ கச்சானைக் கூட விற்பனை செய்ய முடியாத நிலை காணப்படுவதாக செய்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட நாதன்குடியிருப்பு, பிரமந்தனாறு,உழவனூர் ஆகிய பகுதிகளில் ஜம்போ கச்சான் செய்கைக்கு சிறந்த இடம் என தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் கடந்த வருடம் ஜம்போ கச்சான் செய்கையில் பாரியளவு விளைச்சலை பெற்றிருந்தது.

ஆனால் இவ்வருடம் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக ஜம்போ கச்சான் அறுவடையில் பாரிய வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் இதன் காரணமாக சில விவசாயிகள் ஜம்போ கச்சான் அறுவடை செய்யாது கைவிட்டுள்ளனர்.

எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நஷ்டஈட்டைப் பெற்றுத்தர வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (5-6-316)

## வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இராமேஸ்வர மீனவர்கள்



(இராமேஸ்வரம்)

தமிழக மீனவர்கள் 27 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதைக் கண்டித்து இராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட விசைப்படகுகளை விடுவிக்க வலியுறுத்தி நேற்று முதல் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதோடு நாளை 18 ஆம் திகதி பாம்பன் பாலத்தில் மறியல் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளதாகவும் மீனவர்கள் தீர்மானித்துள்ளனர். (5-6)

## கசிப்புடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கசிப்புடன் சிறுவன் ஒருவனும் பெண்ணொருவரும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய் யப்பட்டுள்ளனர்.

ஊரெழு பகுதியில் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அவ் விடத்திற்கு விரைந்த பொலிஸார் ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்புடன் 17 வயது சிறுவனை கைது செய்தனர்.

அதேவேளை பிறிதொரு இடத்திலும் கசிப்பு விற்பனை இடம்பெறுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு விரைந்த பொலிஸார் 44 வயதுடைய பெண்ணொருவரை கைது செய்ததுடன், அவரது உடைமையில் இருந்து 5 லீற்றர் கசிப்பை மீட்டுள்ளனர்.

கசிப்புடன் கைது செய்யப்பட்ட இருவரையும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(5-6-33)

## ஊட்டச்சத்து குறைப்பாட்டால் 56 ஆயிரம் குழந்தைகள் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் 56 ஆயிரம் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளதாக பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை தணிக்கும் துறை சார் மேற்பார்வைக் குழு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியமான யுனிசெப் வெளியிட்ட ஆய்வறிக்கையில் இந்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளதாக துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் காமினி வலேபொட தெரிவித்துள்ளார். (5-6)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சினால் விருந்தோம்பல் கற்கைநெறி துறையில் வேலைவாய்ப்பினை எதிர்பார்த்திருப்பவர்களுக்காக யாழ்ப்பாண மாவட்டத்தில் விருந்தோம்பல் கற்கைநெறி தொடர்பான பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பயிற்சி கட்டணம் முற்றிலும் இலவசமாக ஆரம்பிக்கப்படும். இவ் விருந்தோம்பல் கற்கை நெறி தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. மேற்படி பயிற்சியில் இணைந்து கொள்ள 077 936 6490 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என மாவட்டச் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (5-6)

## ஐஸ்போதையுடன் இருவர் கைது

(கொழும்பு)

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பூநொச்சிமுனை பகுதியில் 5 கிராம் 40 மில்லிகிராம் ஐஸ் போதை பொருளுடன் மாமாங்கம் மற்றும் காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த இரு வியாபாரிகளை கைது செய்துள்ளதுடன் மோட்டார் சைக்கிள் ஒன்றை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் பூநொச்சிமுனை பகுதி வீதியில் பொலிஸார் புலனாய்வு பிரிவினர் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். (5-6)

(யாழ்ப்பாணம்)

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தினால் முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பகுதிநேர கற்கைநெறிகளாக நீரியல் வளர்ப்பு மற்றும் நீரியல் வள முகாமைத்துவ தேசிய டிப்ளோமா, கடலுணவு தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா, கடலக ஏற்பாட்டியல் மற்றும் முகாமைத்துவ தேசிய டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளும் முழுநேர மற்றும் பகுதிநேர கற்கைநெறிகளாக நீரியல் வளர்ப்பு தொழில்நுட்பவியலாளர், வெளி இணைப்பு இயந்திர பொறிவலர், கடலக மாலுமி, சுழியோடி, உயிர் பாதுகாப்பு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், அலங்கார மீன்வளர்ப்பும் முகாமைத்துவம், நீச்சல் பயிற்சி நெறி, கடலக வரைபடம் வாசித்தலும் செய்மதி தொடர்பாடலும் ஆகிய பயிற்சிநெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

படகினை செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள விரும்புபவர்களுக்கு கடலக மாலுமி பயிற்சி நெறியான்து பயனுள்ளதாக அமையும்.

க.பொ.த சாதாரண தரம், உயர்தரம் தோற்றியவர்கள் மற்றும் துறைசார் ஆர்வமுடையவர்கள் இக்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்க முடிவதுடன் இக் கற்கைநெறிகளை பூர்த்தி செய்பவர்கள் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் தொழில்வாய்ப்புகளை பெற்றுக்கொள்ளும் வகையில் தேசிய தொழிற்தகைமைச் சான்றிதழினை பெற்றுக் கொள்ள முடியும்.

மேற்படி கற்கைநெறிகளை கற்க விரும்புபவர்கள் உரிய விண்ணப்பப்படிவங்களை தபாலிலோ அல்லது நேரிலோ எமது அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 25.10.2023 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும் என யாழ். இலங்கை சமுத்திர பல்கலைக்கழக பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் கோ. அருள்சிவம் அறிவித்துள்ளார். (5-6)

## மயக்க மருந்தின்றி மூளையில் உள்ள கட்டியை அகற்றிய மருத்துவர்கள்

(அநுராதபுரம்)

அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் நரம்பியல் சத்திரசிகிச்சை பிரிவு, நோயாளியின் மூளையிலுள்ள கட்டியை அகற்றும் நடவடிக்கையை மயக்க மருந்து இன்றி நோயாளி விழித்திருந்த போது வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளனர்.

இலங்கையில் உள்ள பொதுத்துறை மருத்துவமனை ஒன்றில் முதன் முறையாக இவ்வாறான சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


அநுராதபுரம் நொச்சியாகம பிரதேசத்தில் வசிக்கும் 36 வயதுடைய சிற்பி ஒருவரே இந்த அறுவைசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அவரது இடது மூளையின் முன்புறம், உடலின் வலது பாதியின் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் பகுதிக்கு அருகில் உள்ள கட்டியை மருத்துவர்கள் அகற்றியுள்ளனர்.

இத்தகைய சிக்கலான அறுவைசிகிச்சை செய்யும் போது,நோயாளி பொதுவாக முழுமையான மயக்க நிலையில் வைக்கப்படுகிறார்.

ஆனால் இந்த அறுவை சிகிச்சையில், நோயாளிக்கு முழுமையாக மயக்க மருந்து கொடுக்கப்படவில்லை. மேலும் சிகிச்சைக்குப்பின் நோயாளி எந்த பிரச்சினையும் இல்லாமல் நலமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். (5-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 310



'வண்டுபண்செயும் மாமலர்ப் பொழில்
மஞ்ஞை நடமிடுமா தோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய
அருள்செய் கேதீச்சுர மது தானே'

என்று சம்பந்தர் பாடியிருக்கிறாரே. அந்த மாதோட்டத்தை நேரில் பார்க்காமல் எழுதியிருக்க முடியுமா? இந்த இராமேசுவரத் தீவிலிருந்தபடியே மாதோட்டத்தை எட்டிப் பார்த்துவிட்டு எழுதியதாகச் சொல்லுகிறார்கள் கிணற்றுத் தவளைப் பண்டிதர்கள் சிலர். அத்தகையோர் சொல்வதை நீ பொருட்படுத்த வேண்டாம்."

"சுவாமி! மாதோட்டத்தின் இயற்கை வளங்களைக் கண்டு களிப்பதற்காகவா தாங்கள் அந்த க்ஷேத்திரத்துக்குச் சென்றிருந்தீர்கள்?"

"இல்லை உன்னை அங்கே அனுப்ப எண்ணியிருப்பதால் அதைப் பற்றியும் சொன்னேன். நான் சென்றது இளவரசர் அருள்மொழிவர்மரைப் பார்ப்பதற்காக."

"இளவரசரைப் பார்த்தீர்களா, குருதேவரே?" என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான். அவனுடைய பேச்சில் இப்போதுதான் சிறிது ஆர்வமும் பரபரப்பும் தொனித்தன.

"ஆகா! உனக்குக்கூட ஆவல் உண்டாகிவிட்டதல்லவா, இளவரசரைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு? ஆம், திருமலை! இளவரசரைப் பார்த்தேன் பேசினேன். இலங்கையிலிருந்து வந்து கொண்டிருந்த அதிசயமான செய்திகள் எவ்வளவு தூரம் உண்மை என்பதை நேரில் தெரிந்து கொண்டேன். கேள், அப்பனே! இலங்கை அரசன் மகிந்தனிடம் ஒரு மாபெரும் சைன்யம் இருந்தது. அந்தச் சைன்யம் இப்போது இல்லவே இல்லை. அது என்ன ஆயிற்று தெரியுமா? சூரியனைக் கண்ட பனிபோல் கரைந்து, மறைந்து போய்விட்டது. மகிந்தனுடைய சைன்யத்திலே பாண்டிய நாட்டிலிருந்தும் சேர நாட்டிலிருந்தும் சென்ற வீரர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் எல்லாரும் நம் இளவரசர் படைத் தலைமை வகித்து வருகிறார் என்று அறிந்ததும் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டார்கள். ஒருவரைப் போல் அனைவரும் நம்முடைய கட்சிக்கே வந்து சேர்ந்து விட்டார்கள். மகிந்தன் எப்படிப் போர் புரிவான்? போயே போய் விட்டான். மலைகள் சூழ்ந்த ரோஹண நாட்டிற்குச் சென்று ஒளிந்து கொண்டிருக்கிறான். ஆக, நமது சைன்யம் போர் செய்வதற்கு அங்கு இப்போது எதிரிகளே இல்லை"

"அப்படியானால், குருதேவரே! இளவரசர் நம் சைனியத்துடன் திரும்பிவிட வேண்டியதுதானே? மேலும் அங்கே இருப்பானேன்? நம் வீரர்களுக்குத் தானியம் அனுப்புவது பற்றிய ரகளையெல்லாம் எதற்காக?"

"எதிரிகள் இல்லையென்று சொல்லி திரும்பிவந்து விடலாம். ஆனால் இளவரசருக்கு அதில் இஷ்டமில்லை. எனக்கும் அதில் சம்மதமில்லை. இளவரசரும் சைனியமும் இப்பால் வந்ததும் மகிந்தன் மலை நாட்டிலிருந்து வெளி வருவான். மறுபடியும் பழையபடி போர் தொடங்கும் அதில் என்ன பயன்? இலங்கை மன்னரும் மக்களும் ஒன்று நமக்குச் சிநேகிதர்களாக வேண்டும். அல்லது புலிக்கொடியின் ஆட்சியை அங்கே நிரந்தரமாக நிறுவுதல் வேண்டும். இந்த இரண்டு வகை முயற்சியிலும் இளவரசர் ஈடுபட்டிருக்கிறார். நமது போர் வீரர்கள் இப்போது இலங்கையில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? பழைய போர்களில் அநுராதபுர நகரமே நாசமாகிவிட்டது. அங்கிருந்த பழைமையான புத்த விகாரங்கள், கோயில்கள், தாது கர்ப்ப கோபுரங்கள் எல்லாம் இடிந்து பாழாய்க் கிடக்கின்றன. இளவரசரின் கட்டளையின் பேரில் இப்போது நம்வீரர்கள் இடிந்த அக்கட்டடங்களையெல்லாம் புதுப்பித்துக் கொண்டிருக்கிறார்கள்."

"அழகாய்த்தானிருக்கிறது சைவம், வைஷ்ணவம் இரண்டையும் கைவிட்டு இளவரசர் சாக்கிய மதத்திலேயே ஒருவேளை சேர்ந்து விடுவாரோ, என்னமோ? அதையும் தாங்கள் ஆமோதிப்பீர்களோ?"

"நானும் நீயும் ஆமோதித்தாலும் ஒன்றுதான். ஆமோதிக்காவிட்டாலும் ஒன்றுதான். நம்மைப் போன்றவர்கள் நம்முடைய மதமே பெரிது என்று சண்டையிட்டுக் கொண்டிருக்கலாம்.

(தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# பொதுஅறிவு

- இலங்கையில் முதலில் தமிழ் மொழியில் வெளிவந்த பத்திரிகை எது? — உதயதாரகை
- இலங்கையில் புகழ்பூத்த ஓவியம் எது? — சிகிரியா ஓவியம்
- ஒலிம்பிக் விளையாட்டின் பிறப்பிடம் எது? — கிரேக்கம்
- சந்திரனில் முதலில் காலடி வைத்தவர் யார்? — நீல் ஆம்ஸ்ரோங்
- இரவு நேரத்தில் மலரும் பூவகை எது? — கடுபுல்
- வானவில்லில் எத்தனை நிறங்கள் உண்டு? — ஏழு நிறங்கள்
- திரவநிலையில் உள்ள உலோகம் எது? — பாதரசம்
- சிப்பியில் முத்து விளைய எத்தனை ஆண்டுகள் எடுக்கும்? — 15 ஆண்டுகள்
- அண்மையில் விண்ணில் வெடித்துச்சிதறிய விண்கலம் எது? — கொலம்பியா
- நின்று கொண்டு உறங்கும் பிராணிகள் எவை? — யானை, குதிரை
- நீராவியின் உபயோகத்தைக் கண்டுபிடித்தவர் யர்? — ஜேம்ஸ்வாட்
- வாயில் சுவைநரம்பு இல்லாத பிராணி எது? — திமிங்கலம்
- மலேரியா காய்ச்சலைப் பரப்பும் நுளம்பு எது? — அனோபிலிஸ்
- சாரணர் இயக்கத்தை ஆரம்பித்தவர் யார்? — பேடன் பவல் பிரபு

ஜெ.கௌசிகன்.

## 2

இரு சுடர்களும் எவை?
சூரியன், சந்திரன்

இரு திணைகளும் எவை?
உயர்திணை, அஃறிணை

இருகுரவர் யாவர்?
தாய், தந்தையர்

இரு மரபுகளும் எவை?
தாய்மரபு, தந்தை மரபு

இரு நிதிகளும் எவை?
சங்கநிதி, பதுமநிதி

இரு பொருட்கள் எவை?
கல்வி, செல்வம்

இரு பற்றுகளும் எவை?
அகப்பற்று, புறப்பற்று

இருமைகள் எவை?
இம்மை, மறுமை

கு.அனோஜன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவம் என்பது ஒரு புது மாதிரியான உபாத்தியார். அது பாடங்களைக் கற்றுக் கொடுத்தபின் பரீட்சை வைப்பதில்லை. பரீட்சைகளின் மூலமேதான் பாடங்களை கற்றுத் தருகிறது. – கவியரசு கண்ணதாசன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வரம்பு கட்டாத நெல் விதைப்பும் தூசி பறக்கின்ற விதை நெல்லும்

உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார்...

என்பதன் உண்மைப்பொருளை உணராதவர்கள் உண்மையான விவசாயிகளாக இருக்க முடியாது.

முன்பெல்லாம் வேளாண்மை செய்து உணவை விளைவித்த விவசாயிகள் தங்களின் தொழிலைத் தெய்வமாகப் போற்றினர்.

தாம் பயிர் செய்கின்ற நில மகளை வணங்கினர்.

நெல் விதைப்பதற்கு முன்னதாக, வரம்பு கட்டினர். நாள் பார்த்து நல்ல விதை நெல்லு எடுத்து தேங்காய் உடைத்து கற்பூரம் ஏற்றி விதைத்தனர்.

வேளாண் செய்கையில் இறை நம்பிக்கையும் உணவின் அவசியம் உணர்ந்த பயபக்தியும் மிகுந்திருந்தது.

அதன் வழியிலேயே சூரியப் பொங்கலும் பட்டிப் பொங்கலும் நன்றி செலுத்தும் தமிழர் திருநாளாக போற்றப்பட்டது.

ஆம், அரச சபையில் மன்னரைப் ஏத்திப் பாடுகின்ற புலவர்கள் மத்தியில் வீற்றிருந்த ஔவையார் மன்னனை ஏத்திப் பாடுகையில்; **வரப்புயர** என்று உரைத்து நின்றார்.

**வரப்புயர** என்ற ஔவையாரின் முதல் அடிக்கு கருத்தறியாப் புலவர்கள் ஔவையே! உம் வாழ்த்தின் வகை யாது என்று வினவ; ஔவையார் வரப்புயர நீருயரும் நீருயர நெல்லுயரும் நெல்லுயர குடி உயரும் குடிஉயரக் கோன் உயர்வான் எனப் பாடி நின்றார்.

ஆக, குடியும் கோனும் உயர வேண்டுமாயின், முதலில் வரப்புயர வேண்டும்.

அதனாலேயே வரம்பு கட்டுதல் என்பது நெல் விதைப்பின் பூர்வாங்கமாக அமைந்தது.

ஆனால் இப்போது யாருமே வரம்பு கட்டுவதில்லை. அதனால் நீர் உயர்வதுமில்லை. நெல் வளர்வதுமில்லை.

வளராத நெல் நாற்று தலையாலே தருகின்ற கதிர் காத்திரமானதாக இருக்க முடியாது.

இதற்கும் மேலாக, முன்பெல்லாம் அரிவி வெட்டி அதிலிருந்து விதை நெல் எடுத்துப் பக்குவப்படுத்திய பின்பே, உணவுக்காக நெல் சூடடிக்கப்படும்.

ஆனால் இப்போது விதை நெல்லை விலை கொடுத்து வாங்குவதிலேயே விவசாயிகள் கவனம் செலுத்துகின்றனர்.

அதிகமான விலை கொடுத்து விதை நெல்லை வாங்கும்போதே விவசாயிகளின் தலையில் பாரம் ஏறிக் கொள்கிறது.

உழவுக்கும் விதைநெல்லுக்கும் விலை கொடுத்து நெல் விதைத்தால் எப்படி அதில் இலாபம் வரும்.

பரவாயில்லை அரச விவசாய நிலையங்கள் விற்பனை செய்கின்ற விதை நெல் தரமாக இருக்கும்.

முழுவதும் முளையாய் முளைக்கும் என்ற நம்பிக்கையில் விதை நெல் வாங்கினால் அந்த விதை நெல்லை விதைக்கும்போது அதில் இருந்து வெளிப்பறக்கும் தூசியைப் பார்க்கையில் ஐயா! எங்கும் செப்படி வித்தைதான் நடக்கிறதென்ற உண்மை தெரியவரும்.

ஆக, வரம்பு கட்டாத நெல் விதைப்பும் தூசி பறக்கின்ற விதை நெல்லும் சேர்ந்தால் நிலைமை எப்படியிருக்கும் என்பதை நீங்களே ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

# சமூக ஊடகங்கள் மக்களை தவறாக வழிப்படுத்துகின்றன!

## சட்டக்கட்டுப்பாடுகள் அவசியம் என்கிறார் வஜிர

(கொழும்பு)

சிங்கப்பூரின் தகவல் மற்றும் தொடர்பு ஊடக அதிகாரசபைச் சட்டத்தைப் போன்று நமது நாட்டிலும் சட்டத்தை கொண்டுவந்து, உண்மையான தகவல்களை அறிந்துகொள்ளும்பிரஜைகளின் உரிமையை உறுதிப்படுத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகிலும் இலங்கையிலும் தொடர்பாடல் வளர்ச்சியடைந்ததன் மூலம் மக்கள் பல்வேறு அனுகூலங்களைப் பெற்றனர்.

ஆனால் இறுதியில் மக்களை தவறாக வழிநடத்தவும் அவமானப்படுத்தவும் இந்த தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றமை வருந்தத்தக்க விடயமாகும்.

எனவே, சமூக ஊடகங்களை உருவாக்கியவர்களே அதற்கான விதிகளை கொண்டு வந்தனர்.

தற்போது நம் நாட்டிலும் சமூக ஊடகக் கண்காணிப்பின் அவசியம் குறித்து பல்வேறு கருத்தாடல்கள் இடம்பெற்று வருகிறது.

உலகின் வளர்ச்சி அடைந்த நாடுகள் தகவல் தொடர்பாடலை அல்லது ஊடகங்களை ஒழுங்குபடுத்தவும், மக்களுக்கு சரியான தகவல்களை வழங்கவும், சட்ட விதிமுறைகளை தயாரித்துள்ளன.

சிங்கப்பூரின் தகவல் தொடர்பாடல் ஊடக மேம்பாட்டு அதிகார சபைச் சட்டம் சிங்கப்பூரின் வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானதாக மாறியுள்ளது.

ஆசியாவிலும், உலகிலும் இலங்கை வலுப்பெற்று நிற்க, ஊடகங்களின் செயற்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

அரசியல் ரீதியில் சிந்தித்துப் பார்த்தாலும் கூட, அரசியலில் பொய்களை பரப்பும் கலாசாரம் எமது நாட்டில் மாற வேண்டும்.

அதேநேரம், அத்தியாவசியமான உண்மைகளை மறைக்காமல் இருப்பது குறித்தும் ஊடகங்களுக்கு பொறுப்பு உள்ளது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இத்தகைய கண்காணிப்பு முறை, ஊடகங்களை வலுப்படுத்துமே தவிர ஊடகங்களைக் கட்டுப்படுத்தாது என்பதை அனைத்து ஊடகவியலாளர்களும் மற்றும் அனைத்து மக்களும் அறிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (7)

# இறந்த நிலையில் கரையொதுங்கிய ஆமைகள்

(மன்னார்)

மன்னார் தென் கடல் பகுதியில் கடல் ஆமைகள் இறந்து கரை ஒதுங்கி வருவதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்ததை தொடர்ந்து வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு வருகை தந்து உயிரிழந்த ஆமைகளை மீட்டுள்ளனர்.

கடந்த மூன்று தினங்களாக மன்னார் தென் கடல் பிராந்தியத்தில் அதிகமான கடல் ஆமைகள் இறந்து கடலில் மிதந்து வருவதாகவும் அத்துடன் அதிகமான ஆமைகள் இறந்த நிலையில் மன்னார் சிலாவத்துறை பகுதி கடற்கரைப் பகுதிகளில் கரையொதுங்கி வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக வன ஜீவராசிகள் திணைக் கள அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து அதிகாரிகள் நேற்று அப்பகுதிக்கு விஜயத்தை மேற்கொண்டு அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தொடர்ந்து கடந்த மூன்று தினங்களாக ஆமைகள் கரையில் ஒதுங்கி வருவதுடன் மேலும் ஆமைகள் கடலில் மிதந்து வருவதாகவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (5-6-285)

# விண்ணப்பம் கோரல்

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு புதிய உறுப்பினர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்களை அரசியலமைப்பு பேரவை கோரியுள்ளது.

விண்ணப்ப அறிவிப்பு மற்றும் அது தொடர்பான விண்ணப்பம் பாராளுமன்ற இணையதளம் மூலமாகவும் பகிரங்கப் படுத்தப்பட்டுள்ளது.

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவிற்கு புதிய உறுப்பினர்களை நியமிக்க அரசியலமைப்பு பேரவை கடந்த மாதம் தீர்மானித்திருந்தது.

ஊழல் தடுப்புச் சட்டத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பு காரணமாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கு புதிய உறுப்பினர்களை நியமிப்பது பல மாதங்களாக தாமதமானது.

எனினும்,அந்த சட்டத்தில் உள்ள குறைபாட்டை சரி செய்யும் வகையில் இன்று பாராளுமன்றத்தில் திருத்தம் கொண்டு வரப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **வவுனியா பிரதேசத்தில்** எல்லப்பர் மருதங்குளம், ஆசிக்குளம், கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம் மாதா கோவிலடி, கோவில்குளம் 10 ஆம் ஒழுங்கை, மகாறம்பைக் குளம், மதுரநகர் கல்நாட்டினகுளம், பெரிய கூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம், சி.ஐ.சி கல் உடைக்கும் ஆலை, அளுத்வத்த, போகஸ்வேவா, மாமடுவ கிராமம், மகாகச்சக்கொடிய, மல்மடுவா (மகாகச்சக்கொடிய), நாமல்கம, நந்திமித்திரகம, பிரப்பன்மடு, சலலிஹினிகம ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

# வவு. வைத்தியசாலையில் மத போதனைக் குழுக்கள்

## மன உளைச்சலில் நோயாளர்கள்

(வவுனியா)

வவுனியா வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுவோரை அங்கு வரும் குழுவினர் மதம் மாற்ற போதனை செய்வதாக நோயாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வவுனியா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்று வைத்தியசாலை நோயாளர் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் போது அங்கு வரும் சில குழுவினர் நோய் தீர்க்கப் போதனை வழங்குவதாகவும், நோயாளர்களுக்கு உதவுவதாகவும் கூறி தமது மத போதனைகளை வழங்குவதுடன், மதம் சார்ந்த துண்டு பிரசுரங்களையும் விநியோகித்து வருகின்றனர்.

இதனால், சிகிச்சைக்காக செல்பவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளதுடன், குறித்த சம்பவங்கள் நோயாளர் விடுதிகளில் நடைபெறுவதால் வைத்தியசாலை நிர்வாகம் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளனர். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

13

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



அன்றியும் அநுராதபுரம் சிங்கள நாட்டுத்தலைநகராய் விளங்கிய காலத்துத் தமிழ் அரசரும் காலத்துக்குக்காலம் அங்கு ஆண்டு வந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்னும் சிங்கள அரசர் சிலர் அரசியற் தொல்லைகள் ஏற்படுங் காலத்து வடஇலங்கைக்குச் சென்று அங்கு தங்கள் காலத்தை அமைதியாகக் கழித்தனர் என்றும் தெரிய வருகின்றது.

பின்னர் மகிந்தன் அநுராதபுரத்து அரசபீடத்தேறி இரண்டாம் மகிந்தன் என்னும் பேருடன் ஆண்டு வருங்காலத்தில் அவ்வரசுனுக்கு உரிமை கோரித் தப்புளன் முதலியோர் அவ்வரசினைக் கவரும் பொருட்டு மகிந்தனோடு போர் புரிந்து கலகம் விளைத்து வந்தனர். அக்காரணத்தால் நாட்டில் அமைதி குன்றியது.

அந்நிலையைப் பயன்படுத்தி வடபகுதியில் வலிமையோடு விளங்கிய உக்கிரசிங்கன், வடபகுதியிலுள்ள தலைவர்களையெல்லாம் அடக்கியபின், மாற்றார் கைக்கு இலகுவில் படக்கூடிய கடற்கரைப் பட்டினமாகிய சிங்கை நகரைத் தன்தலைநகராகக் கொள்ளாது அங்கிருந்து வெளியேறிப் பாதுகாக்கக் கூடியதும் மாற்றார் கைக்கு எளிதில் அகப்பட முடியாததும் நிலப்பரப்பினால் சூழப்பட்டதும் பழைய நாகர் தலைநகராயிருந்ததுமான கந்தரோடை என்னும் நகரத்தினைத் தன் தலைநகராக்கினான். ஆளும் அரசனைத் தொலைத்து நாட்டிற் கலகங்கள் ஏற்படுங் காலங்களில் வலிமையுள்ளான் ஒருவன். தன் வலிமையினால் அங்கு தன் ஆட்சியை நிறுவித் தானே அரசானதால் சரித்திரங் காணாத தொன்றன்று.

இவ்வாறு அரசுகட்டிலேறிய உக்கிரசிங்கன் "மாவிட்டபுரம்" என இப்பொழுது வழங்கும் ஊரில், தென்னிந்தியாவிலிருந்து உடல் நலங் காரணமாக வந்திருந்த "மாருதப்புரவீகவல்லி" என்னும் அரச கன்னிகையைக் கண்டு அவளைத் தன் வாழ்க்கைத் துணைவியாக ஆக்கிக் கொண்டான் என்று கூறும் வரலாறு இவர்களுக்கு இரு குழந்தைகள் பிறந்தனர். அவர்களுள் ஒருவனாகிய சயதுங்கவரராச சிங்கன் தந்தையின் பின் செங்கோலோச்சினான்.

இது நிகழுங்காலையில் அநுராதபுரத்தினை முதலாஞ்சேனன் (கி.பி 831 - 851) ஆண்டு கொண்டிருந்தான். இதே காலத்தில் தென்னிந்தியாவில் வலிமையோடிருந்த பல்லவ அரசு வலி குன்றியது. முதலாம் பாண்டியப் பேரரசு தலைதூக்கத் தொடங்கியது.

முதலாஞ்சேனன் காலத்துப் பாண்டிய அரசனொருவன் இலங்கை அரசினைக் கைப்பற்றும் நோக்கத்துடன் வடஇலங்கையில் வந்திறங்கினானென சூளவம்சமெனும் பாளி நூல் கூறும். இப்பாண்டிய அரசன், வரகுணபாண்டியனென்னும் பராந்தக நெடுஞ்சடைநன் மகன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் ஆவன். பாண்டியன் வந்திறங்கியதை அறிந்த சிங்கள அரசன் அவனுக்கெதிராகப் படையொன்றினை அனுப்பினான். இச்சிங்களப்படையைப் பாண்டியமன்னன் எளிதிற் தோற்கடித்து உத்தர தேசத்தைக் கைப்பற்றி "மகாதாலித்த காமம்" என்னும் ஊரில் பாடி வீடமைத்துத் தன்படையுடன் இருந்தான்.

உத்தரப்பிரதேசம் தமிழ்க்குடியிருப்பாக இருந்ததனால் அங்கு வாழ்ந்தோர் பாண்டியன் பக்கஞ் சேர்ந்தனர். அதனால் பாண்டியப்படை இருமடங்கு வலியுற்றது. இவ்வாறு தன்னொடு சேர்ந்த இலங்கைத் தமிழ்ப்படையின் உதவி கொண்டு, தட்டுத் தடக்கின்றி அநுராதபுரத்தேகி அந்நகரைத் கைப்பற்றினான். எனினும் பாண்டியப் படை வடஇலங்கைக் கரையில் இறங்கியபோது, அக்காலத்து அங்கிருந்து ஆணை செலுத்திய தலைவனாகிய செயதுங்கவரராசசிங்கன் அவனை எதிர்த்தான் போலும் அதனால் போர் மூண்டது. அப்போரில் செயதுங்கவரராசசிங்கன் மடிந்திருக்க வேண்டும். பின்பு பாண்டியன் நாட்டைவிட்டுச் சென்றபோது கலகங்களும் குழப்பங்களும் இருந்து வந்தன. இதனைக் கண்ணுற்ற சூழ்ச்சித்திறனும் வலிமையும் படைத்த பாணன் ஒருவன் தருணத்தைத் தப்பவிடாது குடிகளை யடக்கித் தானே அரசனானான்.

செயதுங்க வரராசசிங்கன் வழித்தோன்றல்கள் விசயகூழங்கைச் சக்கரவர்த்திகாலம் வரை நாட்டையாண்டு வந்ததாக யாழ்ப்பாண வைபவமாலை ஒன்றே கூறும். பாணனைப் பற்றிய பரம்பரைக் கதைகளை நவிலும் பிறசான்றுகள் எவையும் இதைப்பற்றி கூறிற்றில. சரித்திரத்தல் சடுதியில் பதவி பெற்று உயர்ந்தோர் போலவே இவனும் பெருமிதமுற்றுத் தன்பெயரையும் புகழையும் நிறுத்தும் வண்ணம், தன் பெயரினால் ஒரு சிறு பட்டினத்தை நிறுவி அதனை யாழ்ப்பாணம் எனப் பெயரிட்டனன் போலும். இதுவே பரம்பரைக் கதைகளினின்று நாம் எடுக்கக்கூடிய வரலாற்றுக் கிடக்கை.

ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவில் சோழப் பேரரசின் காலம் தொடக்குகின்றது. இது ஏறத்தாழ கி.பி 840 இற்குப் பின்னாக இருக்கலாம். இக்காலத்துப் பராந்தக சோழன் (கி.பி 907 - 956) இலங்கைக்குப் படையெடுத்து ஆண்டு வந்தவன் உதயன் (கி.பி. 945 - 953) ஆவான். இச்சிங்கள அரசன் வடஇலங்கையிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தினானோ தெரியவில்லை. இதைப்பற்றிய குறிப்பேதும் சூளவம்சத்தில் இலது.

பாணனும் அவன் பரம்பரையினரும் யாழ்ப்பாணத்தில் ஒரு சிறு பாகத்தையே ஆண்டிருத்தல் வேண்டும். ஏனைய பகுதிகளை வேறு வேறு தமிழ்த்தலைவர்கள் ஆண்டனர் போலும். ஒரு குடைக்கீழ் ஒரு தனியரசன் யாழ்ப்பாணம் முழுவதையும் ஆண்டான் என்பதற்கு ஆதாரமெதுவும் இல்லை.

நிலைமை இவ்வாறிருக்க யாழ்ப்பாணக் கடலெங்கணும் சோழக் கடற்கரை உலாவித்திரிந்தது. யாழ்ப்பாணத்து நாகர் கோயிலுக்கு அண்மையிலுள்ள நெய்தற் கிராமம் ஒன்றிற்குச் 'செம்பியன் பற்று' என்ற பெயர் இன்றும் உளது. சோழப் படைகள் இப்பகுதியில் வந்திறங்கினர் என்பதை இது வலியுறுத்தும். கி.பி ஒன்பதாம் பத்தாம் நூற்றாண்டுகளில் சிங்கள மன்னர் அநுராத புரத்தை விடுத்து புலத்திநகர் எனப் படும் பொலநறுவையைத் தமது தலைநகராக்கிக் கொண்டனர்.

செம்பியன் பற்றிலிருந்து பொலநறுவைக்கு நேராகச் செல்லப்பெருந்தெரு ஒன்று அமைந்திருந்தது. ஆகையால் சோழர் தமது சேனைகளைச் செம்பியன்பற்றில் இறக்கி அத்தெருவினூடாகப் பொலநறுவைக்கு நடத்திச் சென்றனர் போலும். அன்றியும் மாவிட்டபுரப் பகுதியில் ஓரிடம் 'வளவர் கோன் பள்ளம்' என்னும் பெயரால் இன்றும் வழங்குகிறது. சோழர் இப்பகுதியில் பெரிதும் நடமாடினர் என்பதற்கு இதுவும் சான்று பகரும்.

இது இங்ஙனமிருக்க, இராட்டிரகூட அரசனான மூன்றாம் கிருட்டினன் (கி.பி 940 - 967) என்பவன் தக்கோலம் என்னும் ஊரில் நடந்த போரில் பராந்தக சோழனை முறியடித்தான். அதனால் இதுகாறும் முன்னேறி வந்த சோழவரசு சிறுகாலந் தடையுற்றது. தக்கோலத்தில் வெற்றியீட்டிய கிருட்டினன் வெற்றி விருதுடன் தன் புகழை நிலைநாட்டப் பெருமிதத்துடன் எங்கணுந் திரிந்தான் என்பதை இராமேச்சரத்தில் அவன் நாட்டிய கல்வெட்டுச் சான்றுபகரும். அவன் இராமேச்சரம் வந்த நாட்களில் இலங்கையின் வடகோடியிலுள்ள நாகதீபத்திற்கும் (நயினாதீவு) வந்தனனெனச் சூளவம்சம் கூறும்.

இவ்வரசன் வெற்றி வருகையைக்கேள்வியுற்ற சிங்களவரசன் நான்காம் மகிந்தன் (கி.பி 956 - 972) தனது சேனாதிபதி சேனன் என்பானை யனுப்பி அவனைத் தோற்கடித்தான் என்றும் பின்னர் குறிப்பிட்ட இராட்டிரகூட அரசனுடன் நட்புறவு பூண்டு ஓர் உடன்படிக்கை செய்து கொண்டான் என்றும் சரித்திரத்தை ஒருமுகமாய்க் கூறிச் செல்லும் தன் இயல்புக்கிணங்க மெழுகிக் கூறும் அந்நூல். இதுகாறும் பாண்டிய சோழ நெருக்கங்களினால் மிகத் தளர்ந்திருந்த சிங்கள அரசு இக்காலத்துச் சிறிது தழைக்கத் தொடங்கியது. அதனால் பழையபடி சிங்களவருடைய ஆதிக்கம் யாழ்ப்பாணத்திலும் ஒரு சிறிது பரவிற்று எனக் கொள்ளலாம்.

தக்கோலப் பெரும் போரின் விளைவாகச் சிலகாலம் அடங்கிக் கிடந்த சோழப் பேரரசு. பின்பு சுந்தரச் சோழன் பட்டத்துக்கு வந்ததும் முன்னேறத் தொடங்கியது. கி.பி. 1001 ஆம் ஆண்டிற்கும் 1004 ஆம் ஆண்டிற்கும் இடையில் முதலாம் இராசராசன் (கி.பி 985 - 1016) இலங்கைக்குப் படையெடுத்து வந்து வடபகுதியையும் தனதாட்சிக்குள்ளாக்கினான். இதனால் இதுகாறுஞ் சிறிது சிறிதாக முன்னேறி வந்த யாழ்ப்பாண அரசு கி.பி 1070 வரை, இலங்கையின் ஏனைய பாகங்களைப் போலவே. சோழப் பெருமன்னர் ஆட்சிக்குக் கீழ் இருந்து வந்தது.

சோழப் படைவீரர் போய் பிசாசுகள் போல் இரத்தவெறி கொண்டு எங்குந் திரிந்து நாட்டிலுள்ள புத்தபள்ளிகளையும் தவச்சாலைகளையும் சூறையாடிப் பாழ்படத் தினரெனச் சூளவம்சம் புலம்பும். ஆனால் அண்மையில் திருக்கோணமலையில் கண்டெடுத்த கல்வெட்டொன்றினால் இராசராசச் சோழன் காலத்து 'இராசராசப் பெரும் பள்ளி' என்னும் பெயருடன் ஒரு புத்தபள்ளியமைத்து அதற்கு மானியமும் வழங்கப்பட்டது என அறிகிறோம். பின் முதலாம் குலோத்துங்கசோழன் (கி.பி 1070 - 1120) ஆட்சிக்கு வந்த காலத்து அவன் தளபதி கருணாகரத் தொண்டைமான கலிங்கமெறிந்தோடு அமையாது இலங்கையையும் கைப்பற்றினானெனக் கலிங்கத்துப்பரணி என்னும் நூல் இயம்பும் கருணாகரத் தொண்டைமானே தொண்டைமானாற்றை வெட்டியவனாவான். கரணவாய், வெள்ளைப் பரவை ஆகிய இடங்களில் விளையும் உப்பை இவ்வாற்றின் ஊடாகக் கொண்டு சென்று கப்பல்களில் ஏற்றிச் சோழநாட்டுக்கு அனுப்பினானென இராசநாயக முதலியார் கூறுவர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தலை...

ஜனாதிபதித் தேர்தலை அடுத்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்துக்கு முன்னரும், பொதுத் தேர்தலை 2025 ஓகஸ்ட் மாதத்துக்கு முன்னும் நடத்த திட்டமிட்டிருந்தது.

திட்டமிட்டபடி தேர்தல் நடத்தப்படா விட்டால், வாக்களிக்கும் உரிமையை பாதுகாக்கும் வகையில் சட்டத்தின் ஊடாக செயற்பட எதிர்க்கட்சிகளும் குழுக்களும் தீர்மானித்துள்ளதாக தெரியவருகிறது.

இதற்காக ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, உத்தர லங்கா சஹாபய, சுதந்திர மக்கள் முன்னணி ஆகிய கட்சிகள் மற்றும் குழுக்கள் ஒன்றிணைந்து செயற்பட தீர்மானித்துள்ளன.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கிவிட்டு புதிய தேர்தல் முறைமை கொண்டுவரப்படும் என கூறுவதன் மூலம் அரசாங்கம் உண்மையில் நிறைவேற்று ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்கவோ அல்லது புதிய தேர்தல் முறையை அறிமுகப்படுத்தவோ முயற்சிக்கவில்லை என்றும் மாறாக ஒத்திவைப்பதற்கு தேவையான பின்னணியை உருவாக்கவே முயற்சிக்கின்றது என்றும் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.

அரசாங்கம் தன்னிச்சையாக தேர்தலை பிற்போட்டால் அதற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார். (ந-7)

## இஸ்ரேல்...

யுத்தம் தொடர்பில் கருத்துரைத்த அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர், இலங்கை ஓர் அபிவிருத்தி அடைந்து வரும் நாடு.

தற்சமயம் இஸ்ரேல் - காசா யுத்தத்தில் உலக நாடுகள் தமது ஆதரவினை தெரிவித்த வண்ணம் உள்ளன. உதாரணமாக இஸ்ரேலுக்காக அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளும் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாக இஸ்லாமிய நாடுகளும் தமது பக்கச்சார்ப்பை வெளிப்படுத்தி வருகின்றன.

இவ் யுத்தத்தால் இலங்கை இதுவரை மறைமுகமான தாக்கங்களுக்கே உள்ளாகி வருகின்றன.

ஆனால் தாம் குறிப்பிட்ட ஒரு நாட்டுக்கு மாத்திரம் ஆதரவளிப்போமாயின் அது இலங்கைக்குப் பாரிய நெருக்கடியாகவே அமைய வாய்ப்புள்ளது.

எனவே இவ் யுத்தத்தில் அணிசேராக் கொள்கையினை பின்பற்றுவதே இலங்கை உள்ளிட்ட அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு சாதகமாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## விபரீத...

ழினி (வயது-17) ஆகிய இரு மாணவிகளுமே தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் சடலங்களை மீட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அத்தோடு மாணவிகள் எழுதியதாக நம்பப்படும் கடிதம் ஒன்றினையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

அதில் “எங்களது சாவுக்கு யாரும் காரணமல்ல, இது நாங்கள் எடுத்த முடிவு. எங்களுக்கு வாழவே பிடிக்கவில்லை என உள்ளது.

இவர்கள் இருவரும் இறுதியாக நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றி பெறுபேறுக்காக காத்திருந்த மாணவிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டும் வருகின்றனர். (7)

## தேர்தலை பிற்போட...

தெரிவிக்கையில்,

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற வகையில், நாம் தேர்தலை பிற்போட இடமளிக்கப் போவதில்லை.

உரிய காலத்திலோ அல்லது அதற்கு முன்போ தேர்தலை நடத்த வேண்டும் என்பதுதான் எமது நிலைப்பாடு.

ஜனநாயக நாட்டில், தங்களுக்குத் தேவையான ஆட்சியாளரைத் தெரிவு செய்யவும் தங்களின் கருத்துக்களை வெளியிடவும் மக்களுக்கு முழு உரிமையுள்ளது.

இந்த உரிமையை இல்லாது செய்ய எந்தத் தரப்பினர் முற்பட்டாலும், நாம் அதற்கு ஆதரவளிக்கப் போவதில்லை.

எனவே, எந்த காரணத்தைக் கொண்டும் தேர்தலை பிற்போடும் நிலைப்பாட்டில் பொதுஜன பெரமுன இல்லை என்பதை கூறிக்கொள்கிறோம்” என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

## ஆணொருவர்...

என அடையாளம் காணப்பட்டுள்ளது.

வீட்டில் இரவு படுக்கையில் இருந்து அவரை காணாத நிலையில் தேடிய போது வீட்டின் பின்புறத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டார்.

இச் சம்பவம் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்குச் சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணை மேற்கொண்டு சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை மேற்கொண்டுஅறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-7,60)

## வயோ...

மாதகல் வடக்கு, மாதகலைச் சேர்ந்த சந்திர சேகரம் சச்சிதானந்தம் (வயது-71) என்பவராவார்.

குறித்த மணிமண்டபத்தில் காவலாளியாக கடமை புரிந்து வந்த அவர் நேற்று காலை தூக்கில் தொங்கிய நிலையில் காணப்பட்டார். இது தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

சம்பவ இடத்திற்கு சென்ற பருத்தித்துறை மரணவிசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை பிரேத பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ந-7,60)

## க.பொ.த...

வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2022ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பரீட்சை கடந்த மே மாதம் நடைபெற்றது.

இதேவேளை, புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பான வினாத்தாள்களை பரீட்சையின் பின்னர் சமூக வலைத்தளங்கள் ஊடாக விநியோகித்த நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது. (7)


3 நாட்களில் 2 லட்சாதிபதிகள்
கொவிசெத எமது விற்பனையில் 3 நாட்களில் ராசி
வெல்லப்பட்ட 2 லட்சாதிபதி அதிர்ஷ்டங்கள்
எமது வெற்றிப்பயணத்தில் நாளைய அதிர்ஷ்டசாலிகள் நீங்களே!
நடராஜா அதிர்ஷ்ட இல்லம்
ந.வசீகர் பிரதானமுகவர் சுன்னாகம்
20 லட்சம் N220063 09-9060 10 லட்சம்
ஒன்றாவது வாங்குவோம் என்றாவது வெல்வோம்
(C-7440)

தன நிதானய
திகதி - 2023.10.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1299
T 03 52 59 72 T
Double Chance 31653

லக்கி 7
திகதி 16.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0095
L7 இலக்கம் 20
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 5 3 2 7 9 8

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.16
சீட்டிழுப்பு இலக்கம் 578
மிதுனம் 15 43 45 60 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/10/16
சீட்டிழுப்பு இலக்கம் 5269
P 7 3 5 7 3 3
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 16/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1617
S 15 15 21 38 61
Double Chance 43474

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3511
சீட்டிழுப்பு திகதி 16.10.2023
S 05 08 17 27
S 64168
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2243 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.10.16 தினம் திங்கட்கிழமை
19 23 33 39 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,931,344.00
DLB

சனிதா
திகதி 2023.10.16 வெற்றி வாரம் 4404 வர்ணம் இளம் நீலம்
25 44 46 51 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,813,748.00
செகண்ட் சான்ஸ் 7 6 6 9 6
DLB

கப்ருக
16.10.2023 வெற்றி வாரம் 1419 வர்ணம் பசுமை
U 03 20 22 32 36
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 452,831,034.20
செகண்ட் சான்ஸ் 234475 396
DLB தொலை பேசி: 011-2 333 540-47 Web : www.dlb.lk

ஜயோதா
திகதி 2023.10.16 வெற்றி வாரம் 1965 வர்ணம் செம்மஞ்சள்
02 15 32 62 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.46,572,527.20
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3955 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.16 தினம் திங்கட்கிழமை
24 25 26 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,715,396/-
செகண்ட் சான்ஸ் 776399 178
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட் கிழமை
வெற்றி வாரம் : 2069
சீட்டிழுப்பு திகதி : 2023.10.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,128,160/-
02 09 42 43 H
452747
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்ரேல்...

தலை நடத்தி வருகின்றன.

இதனால் காசாவில் உள்ள 23 இலட்சம் மக்கள் நிர்க்கதியாக உள்ளனர். இஸ்ரேலின் தாக்குதலில் இருந்து காசா மக்கள் வெளியேறாத வகையில் இஸ்ரேல் பலமுனைத் தாக்குதலை நடத்தி வருகின்றது.

இதேவேளை அந்த மக்களுக்கான உணவு, குடிநீர், மருந்துப் பொருட்கள் கிடைப்பதையும் இஸ்ரேல் தடுத்து வருகிறது.

இந்நிலைமையானது காசாவை முற்றாக அழிக்கின்ற இஸ்ரே லின் கபடத்தனம் என பாலஸ்தீன ஆதரவு நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன.

இதேவேளை காசா மீது நடத்துகின்ற தாக்குதலை இஸ்ரேல் உடனடியாக நிறுத்தாவிட்டால் இஸ்ரேல் மீது பாலஸ்தீன ஆத ரவு நாடுகள் போர் தொடுக்கக் கூடிய சாத்தியம் அதிகரித்து வருவதாகவும் இவ்வாறானதோர் சூழ்நிலை ஏற்படும்போது இஸ்ரேல் ஆதரவு நாடுகளும் பதில் தாக்குதல் நடத்தும் எனவும் இது உலகப் போராக மாறும் அபாயம் உண்டெனவும் சர்வதேச போரியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (7)


**IELTS - New Batch ஆரம்பம்**

இத்துடன் Basic & Advance Grammar Classes

இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.

077 798 9830 By:-B.MURALI

வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (17489)


## கணவனின்...

சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணின் கணவரான சந்தேகநபரை சாவகச்சேரி பொலிஸார் தேடிச் சென்றபோது அவர் தலைமறைவாகியுள்ளார்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் சின்னக்கடை பகுதியில் தலைமறைவாகியிருந்த குறித்த சந்தேகநபர் பொலிஸ் புலனாய்வாளர்களால் கைது செய்யப்பட்டார். யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை அதிரடியாக முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து தீவிர விசாரணை முன்னெடுக்கப் பட்ட போது: "நான் மனைவியைத் தாக்கினேன். மனைவி உயிரிழந்தமை எனக்குத் தெரியாது" என்று சந்தேகநபர் வாக்குமூலம் அளித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கைதான சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காகச் சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (7-30,33)


**கலாபூஷண விருதுக்கான வாழ்த்து**



2023 ஆம் ஆண்டுகான அரசாங்க **கலாபூஷண** விருதினைப் பெற்று கோவியம்பதி குடும்பத்திற்கு பெருமை சேர்த்த

உயர்திரு.
**பிள்ளையினார் கிருஷ்ணானந்தன்**

அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வுறுகின்றோம்.

Best Wishes!

(C-7437)

**வே.மகேந்திரன் குடும்பத்தினர்**
கோவியம்பதி,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.



**23 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



திரு.
**பொன்னையா குகதாசன்**
(பிரபல கட்டட கலைஞர்)

பிறப்பு 21.11.1937 இறப்பு 30.09.2000

திதி: திருதியை[17.10.2023]

ஆல மரமொன்று அடி சாய்ந்து....
ஆண்டுகள் இருபத்திமூன்று ஆனதுவே – அப்பா
ஆறவில்லை பாரினிலே எம் நெஞ்சம்
ஆலடியான் பாதங்களை சரணடைந்தீரோ – அப்பா...

'கேமாலயம்'
அல்வாய் தெற்கு,
அல்வாய்.
(17488)

நீங்கா நினைவுகளுடன்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17477)

076 825 7716 (ஆகாஸ்)



**மலிவு விற்பனை**

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7427)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470



**வேலையாட்கள் தேவை**

- மேசன் (சம்பளம் 2500/=)
- மேசன் உதவியாளர் (2000/=)
- தச்சு வேலையாளர் (2500/= – 3000/=)
- தச்சு வேலை உதவியாளர் (2000/=)
- பெயின்ரர் (2000/= – 2500/=)

தங்குமிட வசதி உணவு தேவைப்படின் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புக்கு :
காலை 8.00 மணி - மாலை 5.00 மணிவரை

077 2100 749 (17492)



**வேலையாட்கள் தேவை**

- தொழில்நுட்ப அலுவலர் T.O (குறைந்தது ஒரு வருட அனுபவம்)
- தொழில்நுட்ப அலுவலர் (பயிலுனர்)
- கணிய அளவையியலாளர் Q.S (குறைந்தது ஒரு வருட அனுபவம்)
- கணிய அளவையியலாளர் (பயிலுனர்)

தொடர்பு : காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை

077 2100 749
shaganaconstruction@hotmail.com (17492)



**மேசன் உப ஒப்பந்தகாரர் தேவை (Sub Contractors)**

விலைப்பட்டியலுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புக்கு : காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை

077 2100 749 (17492)



**வெளிநாடுகளுக்கான DHL பொதிகள் சேவை**

மிகக் குறைந்த கட்டணத்தில்
UK - 400/=, Canada - 1000/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

**திருமுருகன் கொம்நெற்**
T.P: 0777 55 45 28
321, K.K.S. Road, Jaffna. (17491)



**VILLAGE HOTEL பஸ் சேவை**
**JAFFNA EXPRESS**
AIRPORT PICK UP DROP SERVICE

வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/= (17434)

T.P:077 544 8503



**Canada and Italy Visa**

Canada மற்றும் Italy போன்ற நாடுகளுக்கான Short Term மற்றும் Long Term விசாக்கள் பெற்றுத் தரப்படும்.
மேலும் சகல நாடுகளுக்கான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Visa Consultant
134, Adiyapatham Road,
Thirunelvely, Jaffna.
077 038 5584 (17491)



**அலுவலக வேலை - பயிற்சி**

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு

- நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
- இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
- பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்

(C-7439)

சம்பளம் - 60,000/- (2 மாதம்)

V2 TRAVELS - 0777-068-777



**அமெரிக்க லொத்தர் விசா**
பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
2025ல் நீங்களும் அமெரிக்காவில்...
ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம் 0768226244

எமக்கூடாக விண்ணப்பித்து வெற்றிபெற்ற ஏராளமானோர் அமெரிக்காவில்

குடும்பத்தினர்களுக்கு இரண்டு வாய்ப்புக்கள் விண்ணப்ப முடிவு திகதி 07-11-2023 (C-7439)

வெளிநாட்டில் வாழ ஒரு இலவச சந்தர்ப்பம்! தவறவிடாதீர்கள்!

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம்-1 0777068777 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | கொழும்பு 0777469777 | திருகோணமலை 0768226237 | சாவகச்சேரி 0768226242 |
| யாழ்ப்பாணம்-2 0768226243 | சுன்னாகம் 0764550670 | [illegible] 0764550673 | பருத்தித்துறை 0768226230 | [illegible] 0776697960 | கொடிகாமம் 0764550675 |
| [illegible] 0768226238 | [illegible] 0764550671 | [illegible] 0777718322 | சங்கானை 0777726322 | [illegible] 0743900353 | [illegible] 0777720322 |
| [illegible] 0764550674 | V2 Travels | | | ஒன்லைன் [illegible] 0768226236 | |


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org